தென்மொழி

T. 5845

இருள் உனக்கு விடியுமா ?

உன்னைப் போலக் கோடிப் பேர்கள்
ஒருங்கிணைந்து புறப்பட் டாலும்
என்னை வீழ்த்த முடியா தென்று
— தெரியுமா ? — அட,
மின்னைப் போலக் கதிரைப் போல
மேலெழும்பும் காற்றைப் போல
அன்னைத் தமிழில் கரைந்து விட்டேன்;
— புரியுமா ?

பொய்யைச் சொல்லிப் புளுகைச் சொல்லிப்
புழுக்கை யெல்லாம் எண்ணி னாலும்
மெய்யை வீழ்த்த முடியா தென்று
—விளங்குமா ? — அட,
எய்யச் சொல்லி அம்பைச் சிலரும்
எடுத்தெடுத்துக் கொடுத்திட் டாலும்,
மையக் குத்தித் தவிட்டில் அரிசி
—துலங்குமா ?

பழியைக் கூறி இழிவைக் கூறிப்
பரக்க எழுதிப் பரப்பி னாலும்
வழியைத் தடுத்தென் திசையைத் திருப்ப
—முடியுமா ? — அட,
விழியைத் திறந்தே குழியில் விழுந்து,
விலாவ லிக்க எம்பி னாலும்
அழியச் சூழும் இருள் உனக்கு
—விடியுமா?

சே. எண் : 26042

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

வடி : 22
லை : 1
விலை
1-25 உருபா

நமக்கு வந்த மடல்கள்.

0 : 1119 : வணக்கத்துக்குரிய பாவலரேறு அய்யா அவர்கட்கு வணக்கம். தங்களின் (நம்மின்) 'தென்மொழி' இதழைக் கண்டேன். தமிழுக்காகத் தொண்டு செய்யும் பைந்தமிழ் நூல் உண்டென்று அறிந்து அளவற்ற அவாவினை அடைந்தேன். தென்மொழி மேலும் பல்கிப்பெருக என்றன் மனமார்ந்த வாழ்த்துகள் !

தென்மொழி எங்கும் பரவட்டும்-தமிழ் மணத்தை உலகமெங்கணும் பரப்பட்டும்-தமிழக வரலாற்றில் தவறாது இடம் பெறட்டும் ! தென்மொழி இன்னும் அதிகப் பக்கங்களில், அதிகச் செய்திகளைத் தாங்கி வரவேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். தங்களின் தமிழ்த்தொண்டு தொடர என்றன் ஒத்துழைப்பு என்றும் தொடரும். தென்மொழியில் பல புதிய பகுதிகள் தொடர வேண்டுமென்று விரும்புகிறேன். தூய தமிழில், புரட்சிக் கருத்துகள் அடங்கிய, பகுத்தறிவுக் கதை ஒன்று இடம்பெற வேண்டுமென விரும்புகிறேன். ஒவ்வோர் இதழிலும் சீர்திருத்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்ட சிறுகதை-கருத்தாழமிக்க பாடல்-வாசகரின் சிந்தனைக்குரிய கட்டுரைகள்-நல்ல பல செய்திகளைத் தாங்கி வரும் துணுக்குகள்-தமிழறிஞரின் பேருரைகள்-கட்டுரைகள்-பழம்பெரும் தமிழ் ஈகி(தியாகி)கள்-ஆங்காங்கே, தமிழுக்குக் கிடைக்கும் பெருமை, இழுக்குகள் பற்றிய செய்திகள் போன்ற பலவற்றையும் வாசகர்க்குத் தந்தால் மகிழ்வோம் என்பது எனது தாழ்மையான கருத்து. தவறிருப்பின் மன்னிப்பீர்களாக ! தென்மொழி சிறக்க எனது வாழ்த்துகள் ; இப்படிக்கு,

— சி. குமார், க.இ., மச்சுவாடி, புதுக்கோட்டை.

0: 1120 : தமிழ்மொழியின் விண் நிலவாகவும், தமிழ்மொழியின் காவலராகவும் திகழும் பாவலரேறு அய்யா அவர்கட்கு என் நெஞ்சார்ந்த வணக்கமும் நன்றியும் படைக்கின்றேன். தங்களைப் பற்றி என் இனிய அன்பர்கள் கூறிட உணர்ந்தேன். தங்கள் தொண்டிற்கும் தங்கள் புலமைக்கும் மீண்டும் என் பணிந்த நன்றியினைப் படைத்துத் தொடர விழைகின்றேன்.

செந்தமிழ் போற்றும் எந்தமிழ்க் காவலரே! நலம்; தாங்கள் நலமும் வளமும் நிறைந்து, காவிரியாற்று மணல்போல் நெடிது வாழ்க என வேண்டுகிறேன். கரணியம் தங்களைப் போன்று உண்மைத் தமிழ்ப் புலமையாளர்கள் ஒருசிலரே உளர். மற்றவர்கள் எல்லாரும் 'புகழும், வாழ்வும், தேடி, ஓடித் தமிழையும் தமிழ்நாட்டையும் அடிமைப்படுத்திக்கொண்டு இருக்கின்றனர். இவர்களுக்குத் தனி ஒழுக்கமும், கொள்கைகளும் கிடையா. மற்றும் பலர் காதல், மது, திரைப்படம், சூது போன்று தங்கள் முயற்சி, சிந்தனை, ஆர்வம், இவற்றில் பெரும்பொருள் அனைத்தையும் செலவிட்டு வாழ்கின்றனர். மற்றும் பலர், இந்த நாட்டில் வந்தேறிய ஆரியர் என்ற புரட்டர்கள், சோம்பேறிகள், இந்த நாட்டு மக்களை நாலாந்தரமாக, மூடப்பழக்கங்களைப் புகுத்தி

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

தொண்டில் எனது மனம்!

மழைக்குக் கரையாது ;
வெயிலுக்குக் காயாது ;
மருள்பனிக்கு நனைந்திடாது !
தழைக்கத் தவிராது ;
தளிர்க்கக் குறையாது ;
தணலுக்குப் பொசுங்கிடாது !
உழைக்கத் தளராது;இங்[கு]
உணக்க வதங்காது;எஃ[கு]
ஒளிர்வாட்குச் சிதைந்திடாது !
குழைக்கத் தமிழ்மணக்கும்
தொண்டில் எனதுமனம்
கூத்தாடும் காலமதிலே !

ஏசலுக்கு மழுங்கா(து);ஓர்
எதிர்ப்புக்குக் குலையாது;இங்(கு)
இழிவுக்குச் சாய்ந்திடாது !
பூசலுக்கு வருந்தாது ;
பொய்யுரைக்கும் அழுங்காது ;
பொறுமைக்குப் புழுங்கிடாது !
ஊசலுக்குத் துஞ்சாது ;
உலுத்தர்க்கும் அஞ்சாது ;
உதவாமைக் கொடுங்கிடாது !
பேசலுக்கும் மீறி,இனத்
தொண்டில் எனதுமனம்
பெயராத காலமதிலே !

நலிவில் நசுங்காது ;
நயப்பில் மயங்காது !
நடிப்புக்கு மசிந்திடாது !
மெலிவில் நெகிழ்க்காது ;
மிகைவாழ்வுக் கேங்காது ;
மெச்சுதற்கும் வீங்கிடாது !
பொலிவில்ஏ மாறாது ;
பூட்டறைக்கும் வாடாது ;
புன்துயர்க்கும் வருந்திடாது !
வலிவில் - தமிழ்நிலத்தை
வாங்கும் செயலில்மனம்
வழக்காடும் காலமதிலே !



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

இலக்கிய இதழ்

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

புரப்பாளர்கள் : தென்மொழி முல்லைவாணன், தென்மொழி
ந. முத்துக்குமரனார், தென்மொழி ப. துரையரசன்,
தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன்,
தென்மொழி எசு. ஆர். பிரான்சிசு, தென்மொழி கா. இளமுருகன்
தென்மொழி தி. தேனியல் செபராசு.

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி: 22] உ௦கசு நளி (நவம்-திசம்85-) [ஓலை-1]

மொழி, இன, நாட்டுக்குழைக்கும்

பொதுநலத் தொண்டர்களுக்கு!

இளைஞர்கள் தங்களின் இளமைத் துடிப்பாலும், அறிவெழுச்சியாலும், செயல் முனைப்பாலும், பொதுநல உணர்வுகளால் கவரப்பெற்றுத் தொண்டுக்கு வருகிறார்கள். வருகிறவர்களில் பலர் தங்கள் பெயர்களுக்கு விளம்பரந்தேடிகளாகவே இருக்கிறார்கள், சிலர் மிகு துடிப்போடு சிலகாலம் பொதுத்தொண்டில் ஈடுபடுகிறார்கள். ஆனால் சில நாள்களில் தங்களின் வேக உணர்ச்சிக்கேற்ற விளைவுகள் உடனே கிடைக்காமையால், ஆடுகளைப்போல அங்கும் இங்கும் அலைந்து சிதறுகி

ருர்கள். அவர்களிடத்து நிலையான கொள்கைப்பிடிப்பு இருப்ப தில்லை; உறுதியான உணர்வுகள் இருப்பதில்லை. ஏதோ ஓர் உந்து வேகத்தால் நாமும் எதிலாவது ஈடுபடவேண்டும், எதை யாவது செய்யவேண்டும் என்னும் துடிப்புணர்வோடு, ஏதோ ஒரு கவர்ச்சியான - ஆரவாரமுள்ள இயக்கத்தில் கால்வைக்கி ருர்கள்: சிறிது காலம் சென்றபின்னர், தாம் ஈடுபட்ட இயக்கத் தைப்பற்றியோ, அதில் உள்ளவர்களைப் பற்றியோ, அதை நடத்திச் செல்பவர்களைப் பற்றியோ, தமக்குப் பட்ட, சரியாகவோ, அல்லது தவருகவோ, சில குறைகளைச் சொல்லி விட்டு வேருேர் இயக்கத்தில் ஈடுபாடு கொள்கிருர்கள். பின்னர் அதிலிருந்து வேருென்றுக்கு. பின் அதிலிருந்து மற்ருென்றுக்கு இடம் பெயர்ந்து கொண்டே இருக்கிருர்கள் தங்கள் மனவுணர்வுக்கும் அறிவுணர்வுக்கும் செயல்நிலைக்கும் ஏற்ப, எதிலேயோ ஒன்றில் கால் ஊன்றுகிருர்கள். இறுதியில், அதிலும் நிறைவுபெருமல் தாமே ஓர் இயக்கத்தைக் கட்டுகிருர்கள். சிலர் பொதுநிலையி லிருந்தே விலகிக்கொண்டு இயல்பான வாழ்க்கையில் ஒன்றி விடுகிருர்கள். இவர் எல்லாமல், இயக்கங்களைக் கட்டிய இளைஞர் களுக்குப் பிறகுதான் தெரிகிறது இயக்கம் என்ருல் என்ன, அதைக் கட்டமைப்பதும், நடத்திச் செல்வதும், நிலைப்படுத்துவ தும், எத்தனைத் தொல்லைகள் வாய்ந்தன என்பது.

அண்மையில் நம் இயக்க ஈடுபாடு கொண்ட இளைஞர் ஒருவர் திருமணம் செய்துகொண்டார். திருமணம் செய்துகொள்ளும் முன்னர் அவர் முனைந்த முனைப்புகளையும், ஈடுபாடுகளையும், கருத்து முழக்கங்களையும், துடிப்புகளையும் சொல்லி முடியாது. அவ்வளவு வேக உணர்ச்சியுடன் ஈடுபட்ட அவர், திருமணம் செய்துகொண்டபின் அதிலேயே அமுந்திப்போனுர். இப்பொழுது ஆளையே பார்க்க முடிவதில்லை. இத்தகைய வேறு சிலர் திருமணத் திற்குப்பின்னர் சிலகாலம்வரை ஈடுபட்டிருந்து, ஓரிரு குழந்தைகள் பிறந்த பின்னர்காணுமற்போய் விடுகின்றனர். ஓயாமல் பேசுபவர் கள் உணர்வெழுச்சி கொண்டவர்கள், செயல் செய்யத் துடிப்ப வர்கள் ஆகியோரில் பலர், இவ்வாறு சாவிகளாகவும், பதர்களா கவும் முளையிலேயே கருகிப்போகிறவர்களாகவும் கால வெள்ளத் தால் அடித்துச் செல்லப்படுபவர்களாகவும் போய்விடுவதைப் பல நிலையிலும், பல வகையிலும் கண்டிருக்கலாம்.

தம் பெயரைத் தூயதமிழாக மாற்றிக்கொண்டவர் ஒருவர், அப்படி மாற்றிக்கொள்ளாமல் பலவாறு மொழியடிமையும், இன அடிமையும், மூடநம்பிக்கைகளையும் கொண்டவர் பலரைப் பாட்டாலும் எழுத்தாலும் உரையாலும் ஓங்கி உரக்கக் கண்டித் துக்கொண்டிருந்த அவர், தம் திருமண அழைப்பிதழில், தம் பழைய வடமொழிப்பெயரை, ஆங்கிலத் தலைப்பெழுத்துகளுட னும், தம் தந்தையார் மற்றும் உறவினர் பெயர்களைச் சாதிப் பட்டங்களுடனும் அச்சிட்டுத் தம் கொள்கை மெலிவை உறுதிப் படுத்திக்கொண்டார்! ஒருவர் ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்து, பட்டம் பெறுகிறவரை மிக எளிய முறையிலேயே உடுத்து உண்டு, அழுத்தமான பொதுவுடைமைக் கொள்கையும், தூய தமிழ் ஆர்வமும் கொண்டிருந்தவர், ஏதோ ஒரு நல்வாய்ப்பினுல், ஓர்

உந்து வண்டி முதலாளியின் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டதுடன், நல்ல உயர்வூதியம் வரும் வைப்பகப் பணி கிடைத்தவுடன், தம் இளமைப் பருவத்தின் அனைத்து உணர்வுகளையும் இழந்து, தம் கொள்கைகளையும் குழிதோண்டிப் புதைத்து விட்டு, இக்கால் பழைய கருப்பன் கருப்பனே என்று தம்மை நிலைப்படுத்திக்கொண்டார். தூயதமிழில் அழகிய புதுப்பெயரை வேண்டி விரும்பிக்கேட்டுப் பெருமிதத்துடனும் வெற்றிக்களிறு போலும் உணர்வுடனும் சூட்டிக்கொண்டு, உலவிய இவர், இக்கால், தம் பழைய வடமொழிப்பெயரை, முன்னில்லாத சமசுக்கிருத ஒலிப்புடனும் எழுத்துகளுடனும் வைத்துக்கொண்டதுடன், தம்மைப் பிறர் அவ்வாறே அழைக்க வேண்டும் என்றும் அவாவுகிறார் என்னே, கால, இட, பொருள் நிலைகளால் ஏற்படும் மாந்த மன மாற்றங்கள்!

இக்கால், பொதுநலவுணர்வும், ஈடுபாடும், திரைப்படக் கலைக்கவர்ச்சியுடன் உலா வருவதைப் பார்க்கிறோம். உண்மையாகவே மக்களுக்குத் தொண்டுசெய்ய வேண்டுமென்ற எண்ணம், இலக்கம் பேர்களில் மிகச் சிலருக்கே உள்ளது. மற்றபடி, பலரோ, அதை வருவாய்க்கும் வாழ்க்கைக்கும், தம் பெயர் விளம்பரத்திற்கும் (இதுவேறு; புகழ் வேறு) ஒரு வணிக வாய்ப்பாகவே பயன்படுத்திக் கொள்வதைப் பார்க்கின்றோம். இதற்கு இன்றுள்ள அரசியல் நிலைகளும் மிகப் பொருத்தமாக உள்ளன. அரசியல் வழியாகக் கிடைக்கின்ற ஆரவார விளம்பரத்தனங்களையும், கட்சிகள் வழியாகக் கிடைக்கின்ற வருவாய்களையும் பார்த்து, அவர்கள் அயர்ந்தும் வியந்தும் போய், இச் செயல்கள்தாம் உண்மையான பொதுத்தொண்டுக்குரிய வழிகள் என்று மயங்கித் தாங்களும் அவற்றில் தாவிக்கொள்கிறார்கள். இந்நிலை இற்றை நாளில், அவர்களில் வேறு எதிலும், அஃதாவது முறையான வாழ்வுப்பாடுகள் எதிலும் நாட்டமற்ற நிலையில் கொண்டுபோய் விட்டுள்ளது, எனில் வியப்பில்லை.

எனவே; உண்மையான உணர்வுடன், நேர்மையான மனத்துடன், மொழி, இன, நாட்டுத் தொண்டுசெய்ய விரும்பித் தங்களை முன்வைத்துக் கொள்ள விரும்பும் இளைஞர்கள், முதலில் தம் நாட்டு மக்களுக்குற்ற இடர்ப்பாடுகள், தாழ்ச்சி வீழ்ச்சி நிலைகள் என்னென்ன என்பதை வரலாற்று அடிப்படையில், வேறு மொழி இன, நாட்டு மக்களின் வரலாற்று நிலைகளுடன் பொருத்திப் பார்த்து, ஆராய்ந்து உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அதன் பின்னர் அந்நிலைகளில் தம் மக்களை ஈடேற்றுவதற்குரிய கொள்கைகள் எவை என்பதை, அரசியல் அடிப்படையில் அல்லாமல் தொண்டு அடிப்படையில் உய்த்துணர்ந்து, தங்களுக்குத் தங்கள் அளவில், ஒரு தெளிவை முதலில் ஏற்படுத்தித் கொள்ளுதல் வேண்டும். அதன் பின்னரே, தாம் தேர்ந்துகொண்ட கொள்கைகள், செயற்பாடுகளுக்குரிய அல்லது அவற்றுக்கு மிக நெருக்கமான கோட்பாடுகளுடன், உண்மையாக, மக்கள் நலன்களை முன்வைத்துப் பாடாற்றக்கூடியனவாகக் கூறிக்கொள்ளும் இயக்கங்களுள் பெரும்பான்மையும் சரியாக உள்ள ஓர் இயக்கத்தைத் தேர்ந்து, தெளியவேண்டும்.

(தொடரும்)



நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

பாட்டு : ௬௫

அன்னையும் மறந்தாள்; ஆயமும் மறந்தாள்;
இன்ன பண்பினன் இனையரு ளாளன்
என்றிவை தேராது தந்தையும் மறந்தாள்;
மற்றிவள் விழுமத்து மன்றுகொள நின்ற
சிற்றில் ஆடுஞ் சிறுமியும் மறந்தாள்;
கிளைகிளை வந்த வுறவு மெண்ணாது
இளையோன் பாங்கின் விளைவும் ஓராது
நெருநல் பாவைக்கு அறுவை உடுத்துச்
சிறுவெண் முத்தத்துத் தொடையல் சாற்றி
மறுகின் ஆடிய குறுநுதல்
பறந்திய சென்றது யார்கொளப் பயின்றே!

பொழிப்புரை :

(மறத்தற்கே இயலாதவளாகிய தன்னைப் பெற்ற) அன்னையையும் மறந்தாள்; (தன்னோடு சேர்ந்து விளையாடுகின்ற தன் அகவையொத்த) தோழிகளையும் மறந்தாள்; புறவுலகில் ஒருவனை இன்ன பண்பை உடையவன், இன்ன அருளாண்மை உடையவன் எனும் இம் மணவியல் கூறுகளைத் தேறவறியாத இவள், (அவ்வாறு தேறி, இவளுக்குப் பொருந்தியவனை அறிவிக்கும் திறனுள்ள) தன் தந்தையையும் மறந்து போனாள்; மற்றும், இவள் தன் வாழ்வை அமைத்துக்கொள்ளும் பெருமையினாலும் தன்மையினாலும், அடுத்துள்ள தன் மணவாழ்வை அமைத்துக்கொள்வதற்குத் தொடர்ந்து நிற்கின்றவளும், இக்கால் சிற்றில் கட்டி விளையாடிக்கொண்டிருப்பவளும் ஆகிய தன் தங்கையாகிய சிறுமியையும் இவள் மறந்து விட்டாள்.

வழிவழியாக வந்த உறவினர்களின் தொடர்புகளையும் எண்ணாமல், இவள் பின்பற்றிச் சென்ற இளையவனின் உறவால் தொடரப்போகும் விளைவுகளையும் ஆராய்ந்து பாராமல், நேற்று (என்னும் கால நிலையில்), (தான் வைத்துக்கொண்டு விளையாடிய) மரப்பாவைக்கு, ஆடைகளை உடுத்தியும், சிறிய வெண்முத்துக்களால் ஆன மாலையினைச் சாற்றியும் தெருவில் ஆடிக்கொண்டிருந்த சிறிய நெற்றியை உடைய இவள், (வெளியூர்க்குத் தன் காதலனுடன்) பறந்து சென்றது, யார் பயிற்றுவித்த பயிற்சியினால்?

விரிப்பு : இப் பாடல் அகத்துறையைச் சார்ந்தது:

தான் அன்புடன் வளர்த்த மகள், தன் அன்னையையும் தன்னோடு ஒத்த ஆயத்தையும், தன்னைப் பேணிப் புரக்கும் தந்தை

யையும், தன் உடன்பிறந்த தங்கையையும், தன் உறவினர்களையும் மறந்தும், எண்ணிப்பாராமலும், தான் காதலித்து உடன்போகிய இளைஞனால் வரும் விளைவுகளையும் எண்ணிப்பாராமல் விளையாடிக் கொண்டிருக்கும் மிக்கிளம் பருவத்தினளாகிய இவள் வீட்டை விட்டு வெளியேறிப் போனது, யார் பயிற்றுவித்த துணிவினால் என்று செவிலித்தாய் புலம்பி வருந்தியதாகும் இப் பாடல்.

அன்னையும் மறந்தாள் : மறப்பதற்கும் அரியளாகிய தன்னைப் பெற்ற தாயையும் மறந்தாள்.

'உம்'மை சிறப்பும் அருமையும் உணர்த்தியது.

ஆயமும் மறந்தாள் : தன்னோடொத்த மகளிர் கூட்டத்தையும் மறந்தாள்.

அன்னைக் கடுத்தபடி தன்னொடு நெருங்கியிருந்து பழகியும் பயின்றும் ஆடியும் மகிழ்பவர் அவளொத்த தோழியராகலின் அவரையும் மறந்தாள் என்பது வியப்புக்குரியது.

இன்ன பண்பினன், இனையருளாளன் என்றிவை தேராது: இன்ன பண்பினை உடையவன், இந்த அளவின் அருளாளன் என்னும் இவ் வியற்கைப் பண்புகளைத் தேரவியலாதவளாகி,

பெண் ஒருத்தி, தான் மணக்கப்போவானைப்பற்றி அறிந்து கொள்வதற்கு இன்றியமையாத குணங்கள் இரண்டு; அவை அவனது பண்பும் அருள் தன்மையுமாம் என்க.

பண்பு அவன் அவளை வைத்து நடத்தும் இல்லறத்திற்கும், அருள், அவள்பால் அவன் கொள்ளும் ஆர்வத்திற்கும் அக்கறைக் கும் அடிப்படையாம் என்க.

இனி, இவ்விரண்டு பண்புகளையும் உலகியலறிவுசான்ற முதியோரே அன்றி, அவன் புறவெழிலால் மயங்கும் காதற்பெண் அத்துணைச் சிறப்பாகத் தேர்தற்கு இயலாததாகையின் 'தேராது' என்றான்.

இனி, அவ்வாறு தேர்தற்கு உரியவருள் அவள் தந்தையே தக்கவராகலின், அக் கருத்தினைத் தொடர்ந்து அத்தகு தந்தையும் மறந்தாள்-என்றான் என்க.

மற்றிவள் விழுமத்து : மற்று, இவள் பெருமையினாலும், தன்மை யினாலும்.

விழுமம் - பெருமை, சிறப்பு, நன்மை எனும் பல்பொருள் படும் ஒரு சொல்.

மன்றுகொள நின்ற சிற்றில் ஆடும் சிறுமி : திருமணத்திற்கு அணியமாகி நிற்கின்ற, சிற்றில் விளையாடும் தங்கையாகிய சிறுமி.

அக்கையின் திருமணம் நிகழ்ந்து, அதன் பெருமையினதும் நன்மையினதும் அடிப்படையில் தங்கைக்கும் மணம் வந்து கூடும் தன்மை ஈண்டுக் குறிக்கப்பெற்றது.

பெருமை - அக்கை மணந்துகொண்ட மணமகனின் தன்மையால் வரும் குடும்பச் சிறப்பும், அவனுக்கொத்த தகுதியில் தங்கையை யும் மணம்பேச வரும் மணமகனது சிறப்பும்.

நன்மை - அக்கையை மணந்துகொண்டவனால், அவள் தங்கையின் திருமணத்திற்கு வரும் குடும்பவுதவி; அது மணவினைத்துணையும் பொருளுதவியும் ஆகலாம் என்க.

கிளைகிளை வந்த உறவு : மரபான் தொடர்ந்து வரும் குடும்ப உறவு.

குடும்ப உறவு மேலும் தொடர்வான் வேண்டி, இவளை மணங் கொடுக்கவும், மணந்துகொள்ளவும் தகுதியுடைய உறவினர்கள்.

அவர்களையும் எண்ணாது, அவர்கள் இவளை மணங்கொள்ள வியலாது போனதால் வரும் ஏமாற்றத்தையும் அஃதால் வரும் பகையையும் சிறிதும் உணராமல், அயலான் ஒருவனுடன், அவனைத் தன் விருப்பமாக மணந்துகொள்ள வேண்டி வேற்றூர் போகினளே என்று புலம்பினாள் என்க.

இளையோன் பாங்கின் விளைவும் ஓராது : இவளை உடன்போக்கிச் சென்ற இளைஞனாகிய இவள் காதலனின் புதிய கூட்டுறவால் வரும் பலவகையான எதிர் விளைவுகளையும் ஆராய்ந்து பாராமல்.

புதிய உறவால்; இவளை முன்கூட்டி அறியாத புதிய உறவி னர்களாலும், இவள் பெற்றோரின், உற்றாரின் பெருமையறியாத புதுவுறவுக் கணவனாலும், அறியாமையும் மதிப்பின்மையும் கலந்து ஏற்படப்போகும் எதிர்விளைவுகள் என்க.

நெருநல் : நேற்று. கால அண்மைநோக்கி, உலகியல் வழக்கில் நேற்று என்றாள்.

பாவைக்கு : மரப்பாவைக்கு.

அறுவை உடுத்து : ஆடையை உடுத்தி.

சிறுவெண் முத்தத்துத் தொடையல் : சிறிய வெள்ளிய முத்து களால் ஆகிய மாலை.

சாற்றி : சாற்றுவித்து, அணிவித்து.

மறுகின் ஆடிய குறுநுதல் : தெருவில் இறங்கி விளையாடிய சிறிய நுதலையுடைய இப் பெண்.

நெருநல் பொழுதில், மரப்பாவைக்கு ஆடையுடுத்து முத்து மாலை அணிவித்து விளையாடிய இச் சிறுபெண், அவ்விளையாட்டைப் போலவே இவ்வுடன் போக்கையும், இவள் கணவனையும் கருதி, மேற்கொண்டாள் போலும் என்று புலம்பினாள் என்க.

பறந்திய சென்றது : வீட்டை விட்டு வெளியேறிச் சென்றதைக் கூட்டைவிட்டுச் சிறகு முளைத்த பறவை பறந்து சென்றது போல் என்று கருதிக் கூறினள் என்க. இய-விரைவு அசை.

யார் கொளப் பயின்று : யார் பயில்வித்துப் பயின்று கொண்டு.

தான் வளர்த்த அருமை மகள், தான் பெற்ற அன்னை தந்தை யரையும் உற்றார் உறவினரையும இத்துணை விரைவில் துறந்தும் மறந்தும், புதிய உறவான காதல் இளைஞனுடன் வேற்றூர் சென்றாளே, இம் மனத்துணிவை வருவித்தவரும் பயில்வித்தவரும் யாரோ அறிகிலனே என அலமந்து புலம்பினாள் செவிலி என்க.

இப்பாடல் பாலைத் திணையும் செவிலி புலம்பல் என்னும் துறையும் என்க.

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விந்திய பெருநிலப்பரப்பை ஆள்கின்றவர்க்கு இருக்கும் சிறப்பைவிட அருளியார்க்குச் சிறப்புண்டு என்று உலகம் உணரட்டும்.

— கணியன், புதுவை-10.

0: 1124: 'தென்மொழி' ஐயா அவர்களுக்கு வணக்கம்; தங்களின் 'தென்மொழி' அகல நீளம் இல்லாமையோடு ஒழிசலான கருத்துகளும் வெளியிடுவதாக 15-7-85 நாளிட்ட ஆறுவது அறிவு பெற்றவர்களால் நடத்தப்படும் 'உண்மை' எனும் இதழ் வழியாக அறிந்தோம். எனவே இனிமேல் அகலநீளம் அதிகம் உள்ள தினத்தந்தி தமிழ்வளரப் பாடுபடுவார்கள் என நினைக்கிறோம். எம்.சி:ஆர் படத்தை இழவு வீட்டில் கண்டாலும் சீழ்க்கை அடிக்கிற செந்தமிழ் நாட்டில் ம. கோ. இரா. படத்தை அதிகம் வெளியிட்டும் 'உண்மை' இதழ்போன்ற பகுத்தறிவாளர்கள் விரும்பும் அகல நீளத்தோடும் வெளிவரும் தமிழரசு இதழை வாங்கலாம். (75 காசு) 'சோவியத்துநாடு' எனும் இதழ் அகல நீளம் அதிகமாகையால் அதையும் வாங்கலாம்.

தினமலர், தினமணி... கிழமைதோறும் துணையிதழ்களோடு சேர்த்து விலை மலிவாகத் தருகிறார்கள். எனவே, தமிழர்கள் பகுத்தறிவு பெற்றுச் சாதி ஒழித்து மானத்தோடு வாழ அகலம், நீளம், ஆழம், எடை அதிகம் உள்ளதை மட்டுமே பயன்படுத்தித் தமிழினம் தலை நிமிரப் பாடுபடுவார்களாக!

மதுரை ஆதினத்தைக் காட்டிலும் சங்கராச்சாரி எடை அதிகம். பகுத்தறிவு நடிகர்களைவிட(ராதாரவி,எசு.எசு. சந்திரன், டீ. ராசேந்திரன்) உசிலைமணி எடை அதிகம், பிந்துகோசு எடை அதிகம். எனவே தமிழர்கள் பயன்படுத்திக் கொள்(ல்)வார்களாக! இறுதியாக, அகல நீள ஆராய்ச்சியோடு தம் பகுத்தறிவை நிறுத்தாமல் 'ஒழிசலான' என்ற சொல்லைப் பயன்படுத்ியது எந்த அறிவின் அமைப்பில் என்பது தெரியவில்லை. அகற்கெல்லாம் ஏழாவது அறிவு வேண்டுமென்றால் அது நமக்கு இல்லாமையே நன்று! 'கணவனுக்குத் தெரியாமல் திரைப்படம் பார்த்தால் அது ஒருவகைப் பரத்தைமை' எனக்கூறும் பெண்ணடிமை ஒழிப்புக்கருத்துகளைத் தாங்கி வந்து தமிழினத்தை உய்விக்கும்'உண்மை' ஆண்கள் தனியே திரைப்படம் பார்ப்பதை ஆதரிக்கின்றதோ, என என் ஐந்தறிவு சிந்திக்கிறது. மேலும் தென்மொழியைக் கணக்கிட்டு விலையைக் கூட்டுவதிலும் இந்து, எக்சுபிரசு போன்றவற்றைக் கணக்கிட்டு உண்மையின் விலையைக் குறைத்தால் தரமான கருத்துகள்மட்டுமே பகுத்தறிவுத் தமிழர்களுக்கும்(!) பிற தமிழர்களுக்கும் கிடைக்கும்! இதில் எது நல்லதோ அதை விரைவில் 'உண்மை'யில் செய்து தமிழர்களைக் காப்பாற்றுவார்களாக! இப்படிக்கு,

— க. அருணாசலம், அமரர் பூண்டி.

உழைத்து வாழ்வோம்! தமிழை வளர்ப்போம்!

— புலவர் ப. எழில்வாணன், க.மு.கல்.இ.

அண்டிக் கிடக்கும் கவலைகள் ஆயிரம்; - நெஞ்சில்
அல்லும் பகலும் எழுந்திடும் பாயிரம்;
'தொண்டு செய்வாய்; தொண்டு செய்வாய்;-தமிழ்
துலங்கிடத் தொண்டு செய்வாய்!' என்பதாம்!

வீரம் பேசி வினைசெய மறந்தோம்; - இன்று
வீட்டுக் குள்ளே சோற்றுக்குக் கிடந்தோம்!
ஊருக் காக உழைப்பதாய்ப் புகழ்ந்தோம்; - அதில்
உண்மை யின்றி நமக்குளே இகழ்ந்தோம்!

'ஒன்றே செய்யினும் நன்றே செய்வோம்!' - என்றே
உலகம் மதிக்கச் சொன்னும் பயனென்?
பண்டு புகழைக் கெடுத்து மகிழ்ந்தோம்! - நம்
பைந்தமிழ் மொழியைக் குலைக்க விழைந்தோம்!

தெய்வம் உண்டா? இல்லையா? நமக்கேன்?-நமக்குத்
திறமை உண்டா? இல்லையா? வளர்ப்போம்!
உய்யும் வழிகள் உயர்வாய்க் காண்போம்!- நாளும்
உள்ளம் மகிழ உழைத்து வாழ்வோம்!

பொய்யில் உரைகள்; பழியில் புகழை; - இங்குப்
பொருந்தச் செய்து புதுநலன் அடைவோம்!
கையில் உள்ள தொழிலால் நிதமும் - கெட்ட
கரவுகள் தீமை ஒழிய வளர்வோம்!

மூக்கின் வழியே இயங்கும் காற்றும் - ஒருநாள்
முடங்கிப் போகுமுன் தமிழைப் போற்றுவம்!
நாக்கின் நரம்பும் ஒடுங்கு முன்னே - நாம்
நந்தமிழ்ப் புகழைச் சொல்வோம் இன்னே!

பாட்டும் ஆட்டும் அடங்கும் முன்னே - நாம்
பைந்தமிழ்த் தொண்டும் ஆற்றுவம் கண்ணாய்!
வேட்டும் தகரியும் எதிர்த்து வரினும் - நம்
வேட்கை தணிந்து போமோ? உரைப்பீர்!

பாலும் பழமும் பழகிய மனையும் - நம்
பண்புத் தமிழை நினைத்தால் புளிக்கும்!
நாளும் பொழுதும் தமிழின் சிறப்பைச்-செவியில்
நறவாய்ப் பாய்ச்ச உள்ளம் இனிக்கும்!

செய்யும் தொழிலால் மேன்மை அடைவோம்; - உயர்
செல்வம் பெற்றும் தமிழை வளர்ப்போம்!
எய்யும் குறியோ தவறிய தெனினும்-ஓர்
ஏற்றம் காண முறையாய் நிற்போம்!

கல்வித் துறையில் சீரழிப்பு!

இன்று தமிழ்நாடு பல வழிகளிலும் கெட்டுச் சீரழிந்து கொண்டிருக்கிறது. உலகத்திற்கே நாகரிகத்தைத் தோற்று வித்துத் தந்த இந்தப் பழம் பேரினம், இன்று மிகவும் பின்னடைந்த நிலையில் சென்றுகொண்டிருக்கின்றது. வயிற்றுக்குச் சோறு மட்டும் கிடைத்தால் போதும், வேறு ஒன்றும் தேவையில்லை என்று எண்ணுகின்றது இந்த இனம். இன்னும் இருநூறு ஆண்டு கட்குள் ஒருவேளை தமிழினம் இருந்த இடம் தெரியாமல் போவ தற்கான குறிகள் புலப்பட்டுவிட்டன. எல்லா நிலைகளிலும் இழிவை எய்துகின்ற இந்த இனம் தங்களை அழிக்க முயல்பவரையே ஆண்டைகளாக ஏற்று அவர்களிடம் நம்பி இழிந்து போகின்றது.

எந்தெந்த நிலைகளில் இழிவு இல்லை. மொழிநிலையில் பின் னடைந்து, பின் மறைமலை அடிகளார், பாவாணர் போன்ற அரும்பெரும் அறிஞர்களின் தந்நலமற்ற தொண்டாலும் பாவலரேறுவின் இடைவிடாத முயல்வாலும் முன்னேறிப் பின் திரும்பவும் 'பழைய குருடி கதவைத் திறடி' என்றபடி பாழான பாதைக்கே செல்கின்றது. மொழி அழிந்தால் இனம் அழியும் என்றபடி இம் மொழியை முதலில் சிதைத்து, அதன் மூலம் அதற்கு அழிவேற்படுத்தப் பகையினங்கள் என்னவெல்லாம் செய்து பார்க்கின்றன என்பதை இ'து ஏனோ இன்னும் எண்ணி விடவில்லை.

கலையெனும் பெயரில் கழிசடைகள் நுழைந்து தமிழினப் பண்பாட்டை ஒழுகலாறுகளைச் சிதைக்கின்றன. மூளைத் மூன்று இலை விடுவதற்குள்ளாகத் திரைப்படத்தைப் பார்ப்பதும் அதைத் திறனாய்வு செய்வதும் அந்த இழிதகையர்போல் தம்மை இறப்ப எண்ணிக்கொண்டு இழிவுகளில் இறங்குவதும் எவ்வளவோ மிகுந்து விட்டன. பள்ளி சென்று பாடம் பயில்வதில்லை. ஆசிரியன்மாரும் ஆசிரியர் என்ற தம் சொல்லுக்கேற்ப ஒழுகாது என்னென்ன ஒழுக்கக்கேடுகள் உண்டோ அவ்வளவும் செய்கின்றனர். அவர் களைப் பார்க்கும் குழந்தைகளும் அவர்களைப் பின்பற்றி அழிவைத் தேடுகின்றனர்.

பள்விகள் எல்லாம் பள்ளிகளாகவே (படுக்கையறை) உள்ளன. உண்பதும் உண்ட மயக்கம் தீர உறங்குவதும்தான் இப்போது அங்கே நடைபெறுகின்றன. சாறவுணவு ஒன்றிற்காக மட்டும்தான் கல்வி என்று ஆகிவிட்டது. கல்வி நிலையங்கள் கலை நிலையங்களாக இருந்த காலம் என்றோ மலையேறிவிட்டது. உண்மையுடன் படிக்கும் ஒருசில பிள்ளைகளும் சரியான வழிகாட்டுதல் கிடைக்

(முன் பக்கத் தொடர்ச்சி)

புதுமைத் தொழில்கள் உலகம் புகழ-நம்
புலத்தால் கண்டு பெருமை கொள்வோம்!
பழமை கொண்ட தமிழால் என்றும் - இந்தப்
பாரே வியக்க வகைமை செய்வோம்!

காடு அல்லாடுகின்றனர். தேர்வில் பார்த்து எழுதிவிடலாம் என்ற திண்ணக்கம் இருப்பதாலும் பணத்தை இறைத்துப் பொறியியல் மருத்துவம் போன்ற பட்டப் படிப்பிற்கு இடம் வாங்கிவிடலாம் என்ற இறுமாப்பு இருப்பதாலும், அவரை இவரைப் பிடித்துப் பணியில் அமர்ந்துவிடலாம் என்ற ஆணவம் இருப்பதாலும், பணத்தைச் சேர்க்க என்னென்ன குறுக்கு வழிகளைக் கொள்ள வேண்டுமோ அதற்குத்தான் பாடுபடுகின்றனர். அதற்குத்தான் தங்கள் இளமைகளைப் பாழாக்குகின்றனர். எதிர்ப்போரைச் செல்லாக் காசாக்குகின்றனர். இதற்காகவே ஒப்போலைகளைப் பெட்டுத் தங்களைச் சட்டமன்றங்கட்கு அனுப்பிவைத்த ஏதிலிகளை ஈவு இரக்கமின்றித் துன்புறுத்துகின்றனர். தங்களின் இழி செயல்களை அவர்கள் கண்ணுறாதிருக்க-அதுபற்றிய எண்ணங்கொள்ளாதிருக்க-களியாட்டங்களில் ஈடுபடுத்துகின்றனர். திரைப்படத்தை அதற்கு ஒரு கருவியாக்குகின்றனர். திரைப்படம் பார்த்தல் என்பது இன்று அன்றாட அலுவல்களில் ஒன்றாகிவிட்டது, தமிழ் இனத்திற்கு. தங்கள் பொய்ம்மைகளையும் போலிமைகளையும் திரையில் மூடிப் புனுகு பூசுகின்றனர். இந்த இனமும் தங்களைக் கடைத்தேற்றும் நல்ல உள்ளங்களையே ஏசியும் வீசியும் இன்னல் செய்கின்றது. ஏமாற்றுக்காரரிடம் நம்பி அழிகின்றது.

இந்த நிலையில் கல்வித்துறையை நடுவண் அரசு எடுத்துக் கொள்ளப் போகிறதாம், வரும் கல்வியாண்டில் இருந்து. எல்லா நிலைகளிலும் இந்தியை நுழைத்தாகிவிட்டது. இருப்பது கல்வித் துறைதான். அதில் நுழைத்துவிட்டால் முற்றுப்பெற்றதாகிவிடும். மேலும் ஓர் இனத்தை அடிமைப்படுத்த இதுதான் சரியான வழி. தமிழகம் இன்றுள்ள நிலையில் ஏமாற்றுக்காரருக்கு இஃது ஓர் எளிதான பணிய திரவிடப் பிறங்கடை—பெரியாரின் வழி என்று சொல்லிக்கொண்டு, ஆரியரிடம் தங்களை அடகு வைத்தோர் ஆண்டு வரும்போது இதுமட்டுமா நடக்கும்; என்னவெல்லாமோ நடக்கும்.

ஈழத்தில் சூலை 83-இல் நடந்த படுகொலைக்குப் பொங்கியெழுந்த தமிழகம் இன்று ஒரு நாளைக்கு 100, 200 என்று காவு கொடுக்கும்போது பொங்கி எழவில்லையே? மக்களின் உள்ளங்கள் உணர்வுகள் மழுங்கியுள்ளன. 'தமிழன் முதலில் பொங்குவான் பின்பு அடங்குவான்' என்றபடி, பொங்கினான் அப்போது; அடங்கினான் இப்போது! ஈழத்தமிழரைப் பார்த்த பின்பாவது இவன் திருந்துவான் என்ற நம்பிக்கை நமக்கு என்றோ போய்விட்டது.

— மெய். அருண்மொழியன்,
தலைவர் உ.த.மு.க. முகவை வட்டம்.

அன்பர்கள் கவனிக்க....

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5-மணிக்குமேல்,எழுதி இசைவுபெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கொள்கிறோம். —அமைச்சர்.

செய்திகள்

1. பள்ளப்பட்டி, மேனிலைப்பள்ளி, இலக்கிய மன்றத் தொடக்க விழா!

திருச்சி மாவட்டம் கருவூர் வட்டம் பள்ளப்பட்டி மேனிலைப் பள்ளி இலக்கிய மன்றத் தொடக்க விழா, தி பி. 2016 மடங்கல் 9 *(25-8-1985)* ஞாயிறன்று, பிற்பகல் 4 மணி அளவில் நிறைந்த தமிழன்பர்கள் குழுமிய நிலையில் பலரும் பாராட்டும் வண்ணம் பாங்குற நடைபெற்றது.

பள்ளியின் தாளாளரும், சிறந்த தமிழுணர்வாளரும் ஆகிய திரு. தா. சை அப்துல் சலாம் அவர்கள் தலைமையேற்க, பள்ளித் தலைமையாசிரியர் திரு. ஏ பி யு அசன்முகைதீன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்கள்.

அப் பள்ளியின் தமிழாசிரியரும், கருவூர் வட்ட உ.த.மு.க. தலைவருமான புலவர் எழில்வாணன் அவர்கள் பாவலரேறு அவர்களின் மொழி, இன, நாட்டு மீட்புத் தொண்டை விளக்கி, வியந்து போற்றி அரியதோர் அறிமுக உரை நிகழ்த்தினார்கள்.

நெடுநாளாய தென்மொழி அன்பரும், புரப்பாளருமாகிய திரு. முத்துக்குமரன் அவர்கள் சுருக்கமாக இலக்கிய மன்றச் செயற்பாடுகள் குறித்து உரையாற்றினார்கள்.

அதன்பின்னர் உ.த.மு கழக முதல்வர் பாவலரேறு அவர்கள், மாணவர்கள் மனங்கொள்ளும் வகையில், தமிழின் பெருமை குறித்தும், மாணவர்களின் எதிர்காலச் செயற்பாடுகள் குறித்தும், தமிழினம் வீழ்ச்சியுற்றுக் கிடக்கும் அவல நிலை குறித்தும், மீட்புக்குரிய வழிமுறைகள் குறித்தும், மின்சாரம் இல்லாத நிலையிலும் ஏறத்தாழ ஒன்றரை மணி நேரம், சீரியதொரு சிந்தனையுரை நிகழ்த்தினார்கள்.

பள்ளியின் மேனிலைத் தமிழாசிரியரும், சிறந்த தமிழ்த் தொண்டருமான புலவர் திரு. கு. கிருட்டிணமூர்த்தி அவர்கள் நன்றி நவின்றார். உ.த.மு.க. துணைப் பொதுச்செயலாளர் திரு. தென்னவன் கோ மற்றும் கருவூர் வட்ட உ. த. மு க. செயலர் பாவலர் கடவூர்-மணிமாறன், மணப்பாறை வ ட உ.த.மு.க. தலைவர் திரு. கண்ணன், செயலர் திரு. நாவை-சிவம், தமிழார்வளர் திரு. வில்லவன்-கோதை, புலவர் திரு. கந்தவேள் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

விழா இறுதியில் அனைவர்க்கும் இனிய சிற்றுண்டி வழங்கப் பெற்றது. விழாவின் தொடக்கத்தில் குழந்தை. ஈகவரசன் அவர்கள், பாவலரேறு அவர்களின் ''பள்ளிப் பறவை'' களில் இருந்து சில பாடல்களை இனிய இசையுடன் பாடி அனைவருக்கும் தமிழ் விருந்து அளித்தமை குறிப்பிடத்தக்கது.

பள்ளியின் தாளாளர் அவர்கள், "முகமதியர்களாகிய நாங்களும் தமிழர்களே" என்று தமிழின உணர்வு பொங்க, பாவலரேறு அவர்களிடம் நெஞ்சம் நெகிழ எடுத்துரைத்தது எளிதில் மறக்கவியலாததாகும்.

பாவலரேறு அவர்களின் அனைத்து நூல்களிலும் ஒவ்வொரு படியினைப் பள்ளி நூலகத்துக்கு வாங்கிப் பயன் சேர்த்த தலைமையாசிரியர் அவர்களின் தமிழ்ப்பற்றை எவ்வளவு போற்றினும் தகும்

இந் நிகழ்ச்சியில் பங்கேற்கப் புறப்படும் முன்னர் கருவூரில் சீரிய தமிழ்ப் பற்றுளரும், சிறந்த பாவலருமான கன்னல் அவர்களின் இல்லத்தில், பாவலரேறு அவர்கட்கும், ஏனையோர்க்கும் இனிய நண்பகல் விருந்து அளிக்கப்பெற்றதும் ஈண்டு நினைந்து மகிழத்தக்கதாகும் —செய்தி: கடவூர்-மணிமாறன், செயலர்,
உ.த.மு.க. கருவூர்.

2. இந்தியத் தொலைபேசித் தொழிலகம்—வெங்காலூர் தமிழ்மன்ற இலக்கிய விழா :

கடந்த கடகம் 6 (21-7-85) ஞாயிறு காலை 9-30 மணியளவில், வெங்காலூர் (பெங்களூர்). இந்தியத் தொலைபேசித் தொழிலகத் தமிழ்மன்ற விழா, தமிழ்மன்றத் திருவள்ளுவர் அரங்கத்தில் நடைபெற்றது. விழாவிற்கு திரு. இலா. து: வரதராசன் தலைமை தாங்கினார். தமிழ்மன்றத் தலைவர் திரு. மா.கோ. வேங்கடரமணன் வரவேற்புரையாற்றினார். அதன்பின்னர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 'தமிழ் இலக்கியமும் தற்கால நிலையும்' என்பது பற்றி இரண்டரை மணி நேரம் விரிவாகவும் விளக்கமாகவும் அரிய சிறப்புரை ஆற்றினார். இறுதியில் தமிழ்மன்ற உதவிச் செயலர் திரு: கண்ணையன் நன்றியுரையாற்ற விழா இனிது நிறைவுற்றது.

விழா நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அண்மைக்கால நாடாச்சுருள் படக்காட்சி காட்டப்பெற்றது. இந்தியத் தொலைபேசித் தொழிலகத்தைச் சேர்ந்த அலுவலர்கள், அதிகாரிகள், தொழிலகக் குடும்ப உறுப்பினர்களும், வெளி அன்பர்களும் இருநிகழ்ச்சிக்கும் ஏராளமாகக் குழுமியிருந்து பயன் பெற்றனர்.

3. தாமரை கலை இலக்கிய மன்றம்—வெங்காலூர் தமிழீழ ஆதரவுக் கருத்தரங்கக் கூட்டம் :

சென்ற கடகம்6 (21-7-85) ஞாயிறு மாலை 6-30 மணிக்கு வெங்காலூர் தாமரை கலை இலக்கியமன்றத்தின் சார்பில், தமிழீழ ஆதரவுக்கருத்தரங்கக் கூட்டம் நிகழ்வுற்றது! நிகழ்ச்சித் தொடக்கத்தில், பாவலர் வீ. வில்வநாதன் அவர்களின் 'பூங்கொத்து' என்னும் பாத்தொகுப்பு நூல் வெளியீட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் பேரா. தண். கி. வேங்கடாசலனார் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியின் வரவேற்புரை, இலக்கிய மன்றத் தலைவர் திரு. பொற்செழியன் அவர்களால் நிகழ்த்தப் பெற்றது. 'பூங்கொத்து' நூலைப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் வெளியிட்டு அரிய உரை நிகழ்த்தினார். நூலின் முதல்

பண் பாடு!

கடலூர் மணிமாறன்.

வாள்வீச்சால் போர்த்திறனும் வையமெலாம் வென்றவர்கள்
ஆள்வினைகள் சென்றதெங்கே இன்று? - ஒரு
சூள்உரைத்தே ஆர்த்தெழுதல் என்று?
தூள்தூளாய்ப் பகைநொறுக்கித் துணிவுடனே வளம்பெருக்கித்
தாழ்வகற்றி வாழ்ந்ததெலாம் அந்நாள்! - புகழ்
வாழ்விழந்து நிற்பதுமேன் இந்நாள்?

வந்தோர்க்கு விருந்தளித்து வாய்ப்புமிகச் செய்தமையால்
வெந்துயரில் இந்நாளில் வீழ்ந்தோம் - நம்
முந்தையரின் நிலைமையினில் தாழ்ந்தோம்!
செந்தமிழை மாய்ப்பதற்கும் சீர்புகழைச் சாய்ப்பதற்கும்
செந்தணலாய்க் கொணர்ந்திடுவார் சட்டம் - நம்
வெந்திறலைக் கருவறுக்கத் திட்டம்!

நெஞ்சிலுரம் பெற்றுவிட்டோம்; நினைவுகளில் ஒன்றிவிட்-
அஞ்சாமல் அணிதிரண்டால் வெல்வோம் - ஒரு [டோம்:
கெஞ்சுதலை விலக்கிவைத்துச் சொல்வோம்!
வெஞ்சமரில் நின்றேனும் விடுதலைப்பண் ணிசைப்பதுவே
எஞ்சுருத பணியெனப்பண் பாடு! - இனி
துஞ்சுவதோ? தோளுயர்த்தி ஆடு!

(முன் பக்கத் தொடர்ச்சி)

படியை திரு. பொற்செழியன் பெற்றுக்கொண்டார். நூல் வெளியீட்டு நிகழ்ச்சியின் நன்றியுரையைப் பாவலர் வி. வில்வநாதன் அவர்கள் ஆற்றினார்கள். நிகழ்ச்சி சிறப்புற அமைந்தது.

இலக்கிய மன்றத்தின் அடுத்த சிறப்பு நிகழ்ச்சியாகத் தமிழீழ ஆதரவுக் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. அதன் தலைமை உரையாக, பேரா. தன். கி. வேங்கடாசலனார் நிகழ்த்திய உரையில், தமிழர் தொன்மையையும், வரலாற்றையும், இக்கால் இவ்வினம் வீழ்ச்சியுற்று வருவதையும், மீண்டும் அது தன் தாழ்ச்சியையும் வீழ்ச்சியையும் தடுத்துநிறுத்தி முன்னேற வேண்டிய கட்டாயத்தையும், மிகச் சிறப்புற எடுத்துக் காட்டினார். அவர்களை அடுத்து, பாவலரேறு பெருஞ்சித்திரனார் தமிழீழத்தின் தொன்மை வரலாற்றை மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்து விளக்கி, இக்கால் அங்கு நடைபெற்று வரும் இன அழிப்புக் கொடுமைகளையெல்லாம் விரிவாகக் கூறி, இத் தமிழினம் உலகத்தில் இவ்வாறான இன அழிவுக்கு உட்படாமல் இருக்க வேண்டுமானால், அது முதலில் ஒரு தனி நாட்டை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்னும் முடிவைக் கூறி, நிறைவான சிறப்புரை நிகழ்த்தினார். விழாவின் முடிவில் மன்றச் செயலாளர் திரு. மு. சேரலாதன் நன்றியுரை கூறினார். நிகழ்ச்சிக்கு வந்திருந்தார் அனைவரும் வழக்கத்திற்கு மாறாக, இரவு நெடுநேரமாகியும், கலையாமல் இருந்து ஆர்வமுடன் கேட்டது குறிப்பிடத்தக்கது.

மதமே... மதமே... மதமே...!

[தனிச்சீர் சமனிலைச் சிந்து]

— தரங்கை பன்னீர்ச்செல்வன்.

மானமுள்ள சீக்கியனை மனமாரப் போற்று—அவன்
மறத்தனமே இனமீட்சி மாண்புகளின் ஊற்று;
ஆனவரைச் சுரண்டுகின்ற அரசியலைத் தூற்று—தேசிய
அறிவடிமை எவ்வோரை அடலேறாய் மாற்று!

பார்ப்பனியம் இந்திராவின் படுகொலைக்கு மூலம்—அதனைப்
பயன்படுத்தி முதலாளர் போடுகின்றார் ஏலம்!
தீர்ப்புரைக்கும் நடுமையவரைத் திரித்தழிக்கும் காலம்-பதவித்
தினவெடுத்தோர் புனைகின்றார் 'தீன்மூர்த்தி'க் கோலம்!

சாதிவெறிக் கலகத்தால் சரிக்கின்றார் தலைகள்—மூடச்
சமயவெறிச் சழக்குகளால் விரிக்கின்றார் வலைகள்!
பாதிவழி போவதற்குள் பண்பாட்டுக் கொலைகள்—இவை
பசப்புகின்ற ஆரியத்தின் பாரதப்பொய்க் கலைகள்!

நாட்டுடைமை வாஞெலியில் நரிக்கும்பல் வீளை—யாண்டும்
நலிவுற்றோர் பருகுதற்கு நறவுதரும் பாளை!
கூட்டுரிமை, மதவொருவல் கொம்பொடிந்த காளை-அவை
கூன்விழுந்த அரசமைப்பின் குருட்டுவிழிப் பீளை!

காந்தியாரை அன்றுசுட்ட காரணியமும் மதமே-இந்திரா
காந்தியினை இன்றுசுட்ட காரணியமும் மதமே;
ஒந்தியாரை நிறம்மாற்றி ஒளிப்பதுவும் மதமே-தேசிய
ஒருமைப்பாட் டோசையிலே கலிப்பதுவும் மதமே!

ஆன்றமைந்த தமிழகத்தை அரிப்பதுவும் மதமே-இந்திய
அன்னையென இந்திராவை இரிப்பதுவும் மதமே!
தோன்றுகின்ற தொலைக்காட்சி 'தூரதர்சன்' மதமே-இந்தியத்
துணைக்கண்ட வரலாற்றுத் துன்பியலும் மதமே!

(அடலேறு-அடல்+ஏறு-வலிமைமிக்க அரிமா; சழக்கு-இழிவு; நறவு-கள்; கூட்டுரிமை- Socialism - மதவொருவல்-மதம்+ஒருவல்- Secularism; அரசமைப்பு-Constitution; ஒந்தியார் - பச்சோந்தி நிறம் மாற்றுதலைப்போல, கட்சிமாறி மக்களை ஏமாற்றும் அரசியல் பச்சோந்தியர்; வரலாற்றுத் துன்பியல்-Political Tragedy-ஈண்டு இந்திராகாந்தியின் அரசியல் படுகொலை).

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள்
அடங்கிய, கிழமை இதழ்

1.	தனியிதழ்	விலை	உரு.	00—65
2.	ஆண்டுக் கட்டணம்		உரு.	36—00
3.	அரையாண்டுக் கட்டணம்		உரு.	18—00

தொடர்புக்கு : தமிழ் நிலம்—5, அருணாசலத் தெரு, சென்னை 5.



நூல் : தமிழரின் தாயகம்.

நூலாசிரியர் : பண்டாரகர் க.ப. அறவாணன், க.மு.,க. இல.
பேராசிரியர் தமிழ்த்துறைத் தலைவர்,
இலயோலாத் தன்னாட்சிக் கல்லூரி, சென்னை.

வெளியீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி,
சென்னை-600 113.

விலை : உருவா 10.

இன்றைய இளந்தலைமுறை அறிஞர்களுள் முன் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர் முனைவர் க.ப. அறவாணன் அவர்கள். தெளிய தமிழறிவோடு நல்ல சிந்தனை வளமும், ஆராய்ச்சி மனப்பாங்கும் பல்வேறு துறைகளில் ஆழ்ந்த ஈடுபாடும் உடையவர். தமிழையன்றி, ஆங்கிலம், பிரெஞ்சு, மலையாளம் போன்ற பன்மொழிகளும் கற்றறிந்தவர். மாந்தவியல், தொல்பொருளாய்வு

(தொடர்ச்சி 28-ஆம் பக்கம் பார்க்க)

சொல்லாய்வறிஞர் **ப. அருளி** அவர்களின்

புதிய, அரிய சொல்லாராய்ச்சி வெளியீடுகள் !

தமிழ், சமற்கிருதம் மற்றும் பிற இந்திய மொழிகளின் ஆராய்ச்சி நிறுவனத்தில் அருளி ஆற்றிய மொழியியல் உரைகள்!

ஐந்து தொகுதிகளாக வெளிவந்துள்ளன !
ஒவ்வொரு தொகுதியும் விலை உரு : 20.
ஐந்து தொகுதிகளும் சேர்த்துத்தான்
விற்பனைக்குக் கிடைக்கும் !

உருபா 110 விடுப்பவர்களுக்கு நூல்கள் பதிவஞ்சலில் விடுக்கப் பெறும் !

பிற விளக்கங்களுக்கு: மறைமலையடிகள் மன்றம், பாகூர் (புதுவை)

முன்னிதழ்த் தொடர்ச்சி : தொடர்—2

மார்க்சிய அறிஞர் நாகராசனுடன் ஒரு கலந்துரையாடல்!

2. மற்றோர் அன்பர், 'இந்திய அரசியல் அமைப்புச் சீரழிவை எப்படி மார்க்சியம் தீர்க்கும் ?' என வினவினர்.

அதற்கு, நாகராசனர், 'இந்தியாவின் இவ் வமைப்பு முறை யானது முதலாளிய அமைப்புமுறை. மக்கள் (சன) நாயகப் போராட்டத்தைத் தடைப்படுத்தக் கூடியது. இம் மக்கள் நாயக அரசின் கூத்தாட்டக்களமான பாராளுமன்ற அமைப்பானது, மக்களினின்று மிகவும் விலகி நிற்பது. அதைப்பற்றி மக்கள் கண்டு கொள்வதில்லை. அறிஞர்களோ அந்த அவைகளில் அறிவுரைகள் நிகழ்த்துகின்றனர். பணங்களால் வென்ற பாரதப் பொம்மைகள் கொலுவீற்றிருக்கும் இடம்தானே அது! சோ எழுதிக் கொண்டு தான் இருக்க முடியும்! எதுவும் செய்ய இயலாது !

முதலில் நம்து முகாமையான எதிரிகளை அடையாளங் கண்டு கொள்ள வேண்டும். புரட்சியாளர்களையும் எதிர்ப் புரட்சியாளர் களையும் கண்டு கொள்ள வேண்டும். இன்றைய உலகமானது புரட்சிக்குச் சார்பான உலகு. அமெரிக்க வல்லாட்சியை மட்டும் 'ஏகாதிபத்தியம் ஏகாதிபத்தியம்' என்று கூறிக்கொண்டிருப்பதால் உருசிய குழுக வல்லாட்சியை மறைத்துவிட முடியாது. மறந்து விடவும் முடியாது.

புரட்சியை முன்னெடுக்கச் சிறந்த தலைமை அமையவேண்டும். புரட்டல் பேச்சு (வாதம்) பொதுவுடைமை எனுமுறைக்கு நந்தி போன்றது. இறைமை முழுமையாகக் காண அந் நந்திப் புரட்டல் பேச்சர்களைப் புரட்டி எடுத்தெறிந்து கருத்துப் போர் செய்ய வேண்டும். புரட்சியில் நம்பிக்கை வைத்து, அதனை முன்னெடுக்க முயல்வதே புரட்சியாளனின் போங்கு. நம்பிக்கையைத் தகர்ப்ப தன்று! எனவே சரியான முறையில் மக்களாட்சி முறை அமைந்திட, நம் நாட்டுச் சூழற்கேற்ற ஆட்சி அமைத்திட முற்போக்கு இயக் கங்களை இணைத்து முன்னெடுக்கும் தலைமை ஒன்று தேவை ! அது மார்க்சியத்தை மக்களிடம் சேர்த்து, மக்களைப் புரட்சிக்கு அணிய (தயார்)ப்படுத்துவதே ! மார்க்சியத்தைக் கொண்டு இவ் விழிவான அமைப்பு முறையை மாற்றி அமைக்கக் கூடியதாகு மெனக் கூறியமர்ந்தார்.

3. மற்ற தோழர் ஒருவர் கேட்டார், 'உலக வரலாற்றில் நல்லவையே நடக்கவில்லை எனக் கூறுகின்றீர்களா ?'

அதற்கு நாகராசனர் சொன்னர், 'புரட்சிக்கு முன்பும் புரட் சிக்குப் பின்பும் புரட்டலாளர்கள் இருக்கத்தான் செய்வர். அவர்

களின் புரட்டலை விரட்டிப், பொதுவுடைமை என்னும் உண்மையை வெல்லச் செய்ய வேண்டும் அதைத்தான் நல்லவை எனக் கூறுதல் சாலும். ஆனால், எதிர்ப் புரட்சியாளர்களிடம் புரட்சியைப் பிறழ்ச்சி செய்து, அளிப்பது (புரட்சிக்கு முன்பும் சரி பின்பும் சரி) என்பது நல்லவை எனக் கூறப் பொருந்தாது. உருசியாவிலும் சீனாவிலும் புரட்சிக்கு முன்னைய புரட்டலாளர்கள் தோற்றாலும் புரட்சிக்குப் பின் அவர்கள் கை ஓங்கி இருக்கிறது இவற்றை உலக வரலாற்றில் நல்லவை என நம்புதல் அறிவுடைமையாகாது.

இந்தியப் புரட்டலாளர்களால் செய்யப்படும் போலியான ஒருமைப்பாட்டுப் பேச்சும் கூத்தும், வானொலி, வானொளிக் கொண்டாட்டங்களும் வெளிப்படை (பகிரங்க)க் காட்சி முறையும் இந்தியப் புரட்டலாள முதலாளிகளின் மூகாமையான கருவிகள். அக் கருவிகளை உடைத்தெறிவதன்றி, 'விளைச்சலைப் பெருக்கு(!); விலையைக் குறை' என்னும் வெற்று முழக்கங்களால் விளையப் போவதொன்றுமில்லை. அக் கருவிகளைக் காணாது செய்ய நாம் நமது மக்களிடை கருத்துப்போர் மூலம் புரட்சியைச் செய்தாக வேண்டும். புரட்சி என்பது நிலையானதாகும் (Revolution is a Permenent). அது பலவேறு கட்டங்களில் நடந்து கொண்டே இருக்கும்'. என்றார்.

'புரட்சி நிலையானதன்று (Revolutions is Not Permenent) என நாகராசனாரை மறுத்து, 'மார்க்சியம் கூறுவது எதுவும் நிலையானதன்று; மாறும் இயல்பினது. உங்கள் கருத்து முன், பின் முரணுள்ளதாக உள்ளதென்றார்" பொதுவுடைமைக் கட்சித் தோழர் ஒருவர்.

'புரட்சி பல்வேறு வகையினது. அதன் படிநிலை வளர்வே புரட்சியின் நிலைப்பாடு. மார்க்சியம், எதுவும் நிலையானதன்று என்பது உண்மையே! புரட்சியும் அவ்வாறே பல்வேறு வகைகளில் (கருத்துப்போர் கருவிப்போர் மறிமாறி நடந்து கொண்டே இருக்கும். எனவே புரட்சி மாறிமாறி (பல்வேறு வகைகளில்) நடக்கும் நிலையான ஒன்று !'

'ஒரு மாந்தனுக்கு அகத்தேவை, புறத்தேவை என இருவகைத் தேவைகள் ஏற்படும். அந்த அக புறத் தேவையைப் பொருத்த முரண்பாடுகளே இயங்கியலுக்கு மூலம்' என்றும், 'ஒரு போராட்டத்தின் வழியே சிறந்த தலைமை உருவாகும் என்றும், அத் தலைமை முற்போக்கு இயக்கங்களை முன்னெடுத்துச் சென்று புரட்சி செய்யும்' என்றும், மாறா நம்பிக்கையுடன் கூறினார் நாகராசனார்.

எல்லாவற்றிற்கும் மேலாக மார்க்சியம் ஓர் உண்மை! எனவே. 'வாய்மையே வெல்லும்' என்றும், எதிர்பார்ப்புகள் நடந்தால்,

அஃது அவ்வெதிர்பார்ப்பவனுக்கு அதிகப்படியான நம்பிக்கையை ஊட்டும் என்றும், தாம் எதிர்பார்த்தவை பல நடந்துள்ளன என்றும், உண்மையே வெல்லும் என்பதாலும் நம் நாட்டில் புரட்சி உறுதியாக உருவாகும் என்றும் மிகு நம்பிக்கையுடன் சொன்னார் நாகராசனார்.

4. தோழர் ஒருவர் எழுந்து, 'நீங்கள் தேசிய விடுதலையில் நம்பிக்கை கொண்டவரா? அல்லது தேசிய இன விடுதலையில் நம்பிக்கை கொண்டவரா?' என வினவி யமர்ந்தார்.

அதற்கு நாகராசனார் அவர்கள் பின்வருமாறு விடையளித்தார்: 'தேசிய விடுதலை என்பது இந்தப் போலியான ஒற்றுமையும் ஒருமைப்பாடும் கொண்ட இவ்விந்தியத் தேசியத்தில் நிகழாது. ஆனால், தேசிய இன விடுதலை என்பது நிகழக் கூடிய ஒன்று! மொழிவாரி மாநிலங்களாக நமது நாடு ஒன்றிணைக்கப்பட்டிருப்பதால், தேசிய விடுதலைக்கு, முதன்மைத் தேவையான கருத்துப் பரப்பலை எம் மொழியில் எம் மக்களுக்கு எப்படிச் செய்ய இயலும்? இயலாது!'

5. பொதுவுடைமைத் தோழர் ஒருவர் இடைமறித்து, 'ஏன் முடியாது? ஆங்கிலம் அதைச் செய்யுமே' என்றார்!

நாகராசனார் கேட்டார், 'எத்தனை மக்களுக்கு ஆங்கிலம் தெரியும்? பாட்டாளிகளா பன்மொழிப் புலவர்களாய் உள்ளனர்? படியாத அந்தந்த மநில ஏழை எளிய பாட்டாளி மக்களிடம் எம்மொழியில் பேசுவது? காசுமீரில் போய் நான் அம்மாநில விடுதலைக்குப் போரிடவோ, அல்லது அதுபோன்ற அயல் மாநிலங்களின் விடுதலைக்குப் பேரிடவோ இயலாது! முடியாது! நாம் யார் அவர்களை விடுவிக்க? நம்மை நாம் முதலில் விடுவித்த பின்னரே மற்றவரைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

ஆந்திராவிலோ, மராட்டியத்திலோ, கேரளத்திலோ நான் சென்று தமிழில் பேசிக்கொண்டிருக்கவோ ஆங்கிலத்தில் பேசிக்கொண்டிருக்கவோ முடியாது. எனவே, அந்தந்த மாநில முற்போக்காளர்கள் அந்தந்த மாநில மொழிகளுக்கு முதன்மை தந்து, அந்தந்த மொழி மக்களிடை அந்தந்த மாநிலச் சூழற்கேற்றபடி கருத்துப் போரையும் கருவிப்போரையும் செய்தல் வேண்டும். எனவே, தேசிய இன விடுதலையே சாலப் பொருந்துவதாகும்,' என்றார் அவர்.

தலைவர், தென்மொழி ப. துரையரசனார் அவர்களும் அக்கருத்தின் உண்மையையும் மெய்ம்மையையும் நுகர்ந்து, 'எம்போன்றவர் கருத்தும் அதுவே' எனக் கூறி அமர்ந்தார்.

6. புரட்சிக்கேற்ற காலச் சூழல் உள்ளதென்றும் அதை முன்னெடுக்கத் தலைமை இல்லையென்றும் நாகராசனார் கூறியதை மறுத்து, தோழர் ஒருவர் 'புரட்சிக்கான சூழல் இல்லை', என்றார்.

'மக்கள் ஒரு நிலையினின்று மற்றொரு நிலைக்குப் புரள்வதே ஒரு புரட்சிதானே? புரட்சி என்பது கருவியேந்திச் செய்யப்படுவது மட்டுமன்று: அஃது ஒரு கருத்துப் புரட்சியாகவும் கலை, மற்றும் பண்பாட்டுப் புரட்சியாகவும் இருக்கலாம். புரட்சி ஒன்றும் சரக்கன்று; சீனத்திலிருந்தும் உருசியத்திலிருந்தும் இங்கு வந்திறங்க! அது(புரட்சி) மக்களிடையில் தோன்றும் மாற்றம் (புரள் + சி = புரட்சி) ஆகும்' என்றார் நாகராசனார்.

7. மற்று தோழர் ஒருவர், 'பொருளியல் விடுதலையே தலையாயது என்றும் மொழிவாரி மாநில இன விடுதலை என்பது நிகழாது என்றும் அப்படி நிகழ்ந்தாலும் அது மற்ற மாநிலப் படைகளால் அடக்கி ஒடுக்கப்படும்' என்றும் கூறினார்.

இதற்கு நாகராசனார் விடை பின்வருமாறு :

'ஐந்து கோடி மக்கள் படையை அயல் மாநிலமென்ன எப்படை வந்தாலும் வெல்ல முடியாது: மக்கள் ஆற்றல் மாபெரும் ஆற்றல். அதை வழிநடத்துவதைப் பொருத்ததே புரட்சியின் வேகமும் காலத்தாழ்த்தமும்.

மொழி என்பது வெறும் கருத்துப் பரிமாற்றக் கருவி மட்டுமன்று; அஃது ஒரு மிகப்பெரும் உயிருணர்வு என்பதை அனைவரும் நினைவில் நிறுத்துக. அழகிய தமிழில் பேசினால் மக்கள் அறியாமல் போய்விடுவார்களா ?

எனவே, மொழிவாரி மாநில இன விடுதலையே புரட்சியைத் தோற்றுவிக்கும். புரட்சியைத் தோற்றுவிக்கும் மக்கள் படையின் இனத்தைச் சேர்ந்த நடுவணரசுப் படையிலுள்ள படைஞர்கள் அப்படையை உடைத்து வெளியேறித் தமிழின மக்களுக்கெனப் போராடுவர்' என்றார்.

'பொதுவுடைமைக் கட்சிகள் 'பொருளியல்' எனக் கூறிக் கொண்டு, மற்ற அரசியல் கட்சிகள் போன்று, அரசியலைப் புரிந்து, அதில் இறங்கி மக்களைத் திரட்ட முன்வரவில்லை. மற்ற கட்சிகளுக்கும் இதற்கும் (பொ.கட்சி) வேறுபாடு இல்லை என்பதை நிறுவுவதாகவே அதன் போக்குகள் அமைந்திருந்தன. தி.மு.க. வும் இந்திய உழவர் உழைப்பாளர் கட்சியும் மக்களைத் திரட்டியது போலவும் உழவர்களைத் திரட்டியது போலவும், ஏன் மக்களை, மக்கள் நலன் கருதும் பொதுவுடைமைக் கட்சிகளால் திரட்ட இயலவில்லை?' என வினவி நின்றார் நாகராசனார்.

அதற்கு தோழர் 'ஒருவர், பொதுவுடைமைக் கட்சியானது மற்ற கட்சிகளைப்போல் தற்காலிகமான, தொலைநோக்கற்ற கோரிக்கைகளை முன்னிறுத்திப் போராடவில்லை; நாங்கள் (!)

நாடகம் தொடர்—5

கொய்யாக்கனி

நாடக ஆக்கம் : அதியமான்

[பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் பாவியம்]

காட்சி —எ

உறுப்பினர்கள் : 1. வள்ளி, 2. கிழவர், 3. கனவில் சிறுகன்.

நிலை : கனவு.

வள்ளி : (உறங்கக் கண்களை மூடிப்பார்க்கிறாள்; மூடியாமல் புரண்டு புரண்டு வருகிறாள்.)

கிழவர் : என்னம்மா? உறக்கம் வரவில்லையோ?

வள்ளி : இல்லை தாத்தா. பூனைமாதிரி உருட்டிய ஒலிகேட்டது. அதற்காக விழித்துப் பார்த்தேன்;

கிழவர் : பூனையும் இல்லை; எலியும் இல்லை; நீ உறங்கு!

(முன் பக்கத் தொடர்ச்சி)

தற்காலிக நோக்கம் கொண்டவர்கள் அல்லர். நாங்கள் (!) தொலைநோக்கர்கள்' என்றார்.

இவ்விடையுரைக்கு மற்ற தோழர் ஒருவரே மறுத்துரை செய்தார். அது பின்வருமாறு :

'பொதுவுடைமைக் கட்சிகள் எந்தெந்தத் தொலைநோக்குக் கோரிக்கைகளுக்குப் போராடியிருக்கின்றன? உங்கள் தொலை நோக்கு எல்லாம் தற்காலிகக் கூலி உயர்வும் ஊதியப் பங்கீடும் தானே? நீங்கள் தாமே பொருளுக்கு அடிமையானவர்கள்?' என்றார்.

கேட்ட தோழர்க்கும் சொன்னதோழர்க்கும் உடனிருந்த தோழர்களுக்கும் இடையில் சூடான உரையாடல் நிகழ, அதை நிறுத்தச் சொல்லி நாகராசனார் சொன்னார்.

'இன்றைய முதலாளியமானது ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்களையே சாதிவேறுபாடுகளையும் அதுபோன்ற மற்ற குமுகாய இழிவுகளையும் தூண்டிவிட்டுப் பாட்டாளி வகுப்புச் சிண்டு முடிப்பு செய்து வருகிறது. அது போதாதென்று, பொதுவுடைமை யானது இன்று, புதுப்பார்ப்பனியமாக ஆக்கப்பட்டுவருகிறது. (Communism is Kind of a New Braminism) என்றார் அவர்.

(தொடரும்)

வள்ளி : நான் உறங்குவேன்; நீங்களும் உறங்குங்கள்.

கிழவர் : (குறட்டைப் போட்டு உறக்கம்.)

வள்ளி : (கனவு காணுகிறாள் அவன் பாட்டுப் பாடுவதுபோலக் கனவு.)

பாட்டு

நெஞ்சுக்குள் காதலவர் இருப்பதால் நான்—கூழ்
கஞ்சானாலும் சூடாகக் குடிக்கமாட்டேன்!

அஞ்சுவேன் கண்களுக்கு மைதீட்டேன்—நான்
மஞ்சளிமை தீட்ட அவர்மறைவார் அச்சம்!

கெஞ்சுவேன் கனவில்வர வேண்டிநானும்—பின்
துஞ்சுவேன் என்றாலும் கண்இமையேன்!

அஞ்சலர் எனக்கிங்கு யாரும் இலர்—வரும்
எஞ்ஞான்றும் இராத்திங்கள் தென்றலுமே!

சிங்கன் : (வந்துகொண்டு) ஓஃகோ. அப்படியா ?

வள்ளி : (நிலைகுலைந்து நிற்கிறாள்)

சிங்கன் : (அவளருகில் சென்று) இரவும், அவ்விரவில் வரும் நிலவும், தென்றலும் குளிர்மையாச்சே! அஃதெப்படி அவை பகையாயின?

வள்ளி : கூடில்லாதபோது, அவை பகைதாமே!

சிங்கன் : ஆமாம், ஆமாம் (கை நீட்டிச்சுட்டி) அதோ அப்பக்கஞ் செல்லலாமா ?

வள்ளி : அந்த ஆற்றங்கரைப்பக்கமா ?

சிங்கன் : ஆம், அங்குதான்.

(சிங்கனும் வள்ளியும் கைகோர்த்து நடக்கின்றனர்) வள்ளி! அந்த எழில்நிறைந்த இயற்கைக் காட்சிகளைப்பார்; எவ்வளவு குளிர்மையாகக் கண்களுக்குத் தெரிகின்றன.

வள்ளி : அது மட்டுமன்று அத்தான். இந்த இரா, சிறிது வேளைக்கு முன் பகையாக இருந்தது. இப்போது......

சிங்கன் : (பட்டென்று) இந்த நிலவும் இன்பந்தரும் கள் !.

வள்ளி : ஓ! அது மயக்கம் தருமே !

சிங்கன் : அன்பே! குடித்தபோது மட்டும் கள் மயக்கம்! ஆனால் எனக்கு, உன்னை நினைத்தாலே போதும் மயக்கம் வரும்!

வள்ளி : அத்தான் நான் அழகாக இருக்கிறேனா ?

சிங்கன் : தேனே! இப்போதுதான் இந்தக் கேள்வியைக் கேட்

கிருய்? வள்ளி சற்று முகிலேப்பார்! உன் அழகைக்கண்டு நாணி அந்த நிலா ஓடுகிறது.

வள்ளி : ம் (சிரித்து) நல்ல கற்பனே.

சிங்கன் : கண்ணே, இந்த முல்லே மலர் (மலரைக் காட்டி) நீ, நகைத்தவுடன் பூத்துவிட்டது

வள்ளி : (வாய்விட்டு) பூக்கும்-பூக்கும் ?

கிழவர் : (விழித்து) வள்ளி என்ன? வாய் குழறுகிருய் ?

வள்ளி : குழறவில்லே தாத்தா, முல்லே மலரைச் சொன்னேன்.

கிழவர் : உறங்கு.

வள்ளி : (கனவு கலேந்ததை எண்ணி) கனவே கலேந்துவிட்டாயோ! (கண்ணீர் விடுகிருள்) கண்ணே! உனக்கு வேண்டும். கண்டவுடன் நோய் செய்யச்செய்த நீ நன்ருக அழு.

கிழவர் : என்னமா உளறுகிருய் ?

வள்ளி : உளறவில்லே தாத்தா. ஓர் ஏறு வந்தது: அஞ்சிவிட்டேன். கண்ணீர் வந்துவிட்டது.

கிழவர் : ஏறு என்ருல் ?

வள்ளி : சிங்கம் சிங்கம்.

கிழவர் : கனவா ?

வள்ளி : ஆமாம்.

கிழவர் : நல்ல வேளே. சரி, படுத்துக்கொள். இன்னும் விடிய நேரம் உள்ளது

வள்ளி : (உறங்கி விடுகிருள்.)

காட்சி—அ

உறுப்பினர்கள் : 1. கிழவர், வள்ளி.

இடம் : குடில்.

காலம் : மறுநாள் காலே.

கிழவர் : (வள்ளியை எழுப்பி) வள்ளி விடிந்து விட்டது. இன்னுமா உறக்கம்? பெண்பிள்ளே விடியுமுன் எழவ்வேண்டாவா?

வள்ளி : (எழுந்து) தாத்தா விடிந்து விட்டதா?

கிழவர் : (பூக்குடலேயை எடுத்துக் கொண்டு) வள்ளி அந்த ஊன்று கோலே எடு; நான் விரைவாகப்போய் மலர்களே விற்று விட்டு

வீட்டிற்கு வரவேண்டும். பொருள்களை அங்காடியில் வாங்கி வருகிறேன்.

வள்ளி : சரி (ஊன்றுகோலை எடுத்துக் கொடுக்கிறாள்) மெதுவாகப் போய்வாருங்கள்.

கிழவர் : உனக்கு எதுவும் வேண்டுமா ?

வள்ளி : ஆமாம். நல்லவேளை நினைவுப்படுத்தினீர்கள். தேறல் வாங்கி வாருங்கள்.

கிழவர் : தேன்தானே, சரி !

வள்ளி : மறந்துவிடாமல் வாங்கி வாருங்கள். நான் தினைமாவு இடித்து வைத்திருப்பேன்; தேனும் தினைமாவும் விருப்பமாய்ச் சாப்பிடுவீர்கள் இல்லையா ?

கிழவர் : (நகைத்துக்கொண்டு) ஆ ம ா ம். ஆமாம் (போய் விட்டார்.)

காட்சி – கூ

உறுப்பினர்கள் : 1; கண்ணையன், 2; வள்ளி.

இடம் : குடில்.

வள்ளி : (கிழவர் போனபின் வாயிலைப்பெருக்கி முடித்துவிட்டுத் திண்ணையில் பாயை விரித்து அமர்ந்து பாட்டுப் பாடுகிறாள்.)

பாட்டு

அடக்கி யடக்கிப் பார்த்தாலும் மடக்கிமடக்கி வருங்காதல்
தொடக்கித்தொடக்கி விட்டுவிட்டு மறந்து போனார்
என்னையே !

கண்டதும் நோய்செய்யும் காதலுக்கு மருந்தில்லை,
கண்டவரே வந்தால்தான் நோய்தீரும்—அல்லல்
தேடும்என் உள்ளத்தை கண்டால் என்னகேடு ?

பெண்டு உள்ளம் அறிய புறவாழ்க்கை நில்லா;
கண்டு கொண்டு வாழவேண்டும் மெய்யே !

எதிர்ப் பாட்டு

கண்ணையன் : நன்றுநன்று சொன்னாய்,நானும் வந்துசேர்ந்தேன்
நல்ல வேளை பார்த்து உன்னைநாடி வந்தேன்!நில்லு .

வள்ளி : (உரை) இந்தா பாரு' தாத்தா இல்லை. தனித்திருக்கும் என்னோடு பேசவேண்டாம். பிறகு வந்து தாத்தாவைப் பார்த்துக் கொள்ளவும்.

கண்ணே : வள்ளி, உன் தாத்தா இல்லாத நேரம் பார்த்துக் காணத்தான் ஓடி வந்தேன்.

வள்ளி : எதற்காக ?

கண்ணே : நான் ஒன்று உன்னைக் கேட்கிறேன்; விடை சொல் !

வள்ளி : இந்தா ! மறுபடியும் கூறுகிறேன்; நடையைக் கட்டு! உன் வினவிற்கு விடை என்னிடம் இல்லை.

(எழுந்து போகிருள்)

கண்ணே : சினங்கொள்ளாதே வள்ளி, நின்றுதான் பேசேன். வள்ளி, நீ என்னை மணப்பதாய் இருந்தால், நாம் செல்வமாய் வாழ்வோம். அதனுல்......

வள்ளி : எதனுல் ? தேவையற்ற பேச்சு தம்பி. தாத்தா வரும் நேரம் ஆகிவிட்டது. அவரிடம் உன் பேச்சை வைத்துக்கொள்.

கண்ணே : தம்பியா !? நானு ? சொற்களை அளந்து போடவேண்டும்.

வள்ளி : ஆமாம் ! தெரியும் ! அறிந்துதான் பேசுகிறேன்.

கண்ணே : வள்ளி, உண்மையாக நான் உன்னைக் காதலிக்கிறேன்.

வள்ளி : நான் உன்னைக் காதலிக்கவில்லை; ஒரு தலைக் காதல் உருப்படாது.

கண்ணே : இருதலைக் காதலாக மாற்ற எவ்வளவுநேரம் பிடிக்கும்?

வள்ளி : உன்னை நினைத்துப் பார்க்கவே நேரமில்லை.

கண்ணே : அப்படியானுல், என்னை நீ விரும்பவில்லையா ?

வள்ளி : ஆமாம், வெறுக்கிறேன்.

கண்ணே : (நெருங்கி) நான் என்ன நினைத்தாலும் நடக்கும்.

வள்ளி : நடக்காது. அது தீங்காக முடியும்.

கண்ணே : தீங்கை நான் சந்தித்தாலும், இறுதியில் நான் உன்னைத்தான் அடைவேன்.

வள்ளி : எட்டாத பழம் நான்.

கண்ணே : எட்டிப் பறித்துக் கொள்வேன்.

வள்ளி : அது வெட்டிப்பேச்சு. கிட்ட வராதே !

கண்ணே : ஒட்டிக்கொள்வேன். தள்ள முடியாது !

வள்ளி : சீ ! திரும்பவும், வெளிப்படையாகக் கூறுகிறேன் ! நீ நினைப்பது வீண்.

கண்ணே : ஓர் ஆண் நினைத்தால், ஒரு பெண்ணை என்னவேண்டுமானுலும் செய்யமுடியும். தெரியுமா, உனக்கு அது ?......

வள்ளி : அதே நேரத்தில், ஒரு பெண் எதையும் நினைக்கவில்லையென்றுல், எதுவும் நடக்காது. அது தெரியுமா ? உனக்கு...

கண்ணே : என்ன செருக்கு உனக்கு ?

வள்ளி : அதைத் தெரிந்து கொண்டாய் அல்லவா ? போய் விடு. (தண்ணீர்க் குடத்தை எடுத்துக்கொண்டு வெளியில் போகிருள்)

கண்ணே : (சினத்தோடு பார்த்துவிட்டு) போ - போ, உன்னை என்ன செய்கிறேன் பார். (போய்விடுகிருன்.) (தொடரும்.)

எற்றுக்கு கவல்கின்றாய், நீ!

[பெரியார் பெரும்பாவலர் கருவூர் பாரி]

எற்றுக்குக் கவல்கின் றாய்,நீ!
எதையுன்னிப் புலம்ப லுற்றாய்!
சொற்றிறம் எழுத்தின் ஆக்கம்
சீருறும் வாழ்வுக் கென்றே
விற்றனை இல்லை யே,நீ!
விண்ணென நிமிர்ந்து நிற்கும்
பற்றெனும் தமிழக் குன்றின்
பகலவா! தமிழின் சேயே!

தனியனாய் அலைந்தாய்! பற்றும்
தணலெனும் சொல்லால் தொட்டாய்!
பனிமழை பகலி ராவைப்
பொழுதென உன்ன நேரம்
இனியில்லை என்ற வண்ணம்
இன்றமிழ் முழக்க மிட்டாய்!
கனியுமா காலம் என்றால்?
காலத்துள் கலந்துள் ளாய்,நீ!

மன்னுமாத் தமிழை மற்றும்
மாண்பினை மறைந்த பண்பை
உன்னுமா றெடுத்தெ டுத்தே
உரைத்தனை! நாளுஞ் சோற்றுத்
தின்னிகள் பற்றி ஏனோ
திடுமெனக் கவல்கின் றாய்! அப்
பன்றிக ளுள்ளும் எட்டிப்
பாய்புலி நிறைய உண்டே!

மொழிப்புலம் விளங்கக் காட்டி
முதன்மொழி தமிழே என்ற
விழிப்பினை நாட்டில் நாட்டி
வீறுறும் அரிமா அன்ன
விழிப்பினாய்! செய்தொண் டொன்றே
வெறியெனக் கொண்டாய்! ஈண்டு
பழிக்கின்றார் பழிக்கட் டும்!மேற்
பாய்புலி பூனை யாமோ!

புதுநலக் கருத்துக் கென்றும்
புலமையோய்! கிட்டும் நன்றி
முதுகினில் குத்தும் கூத்தே!
முத்தநந் தமிழச் சேய்கட்
கிதுபுதி தாமோ? நாளும்
இழிந்தமை சுமந்த நெஞ்சம்
கதும்என வீழும்! மாளும்!
கிடக்கட்டும் தொழும்புக் கூட்டம்!

கூடியே குழைந்து நன்கு
கும்பிட்டு வணங்கி அன்பின்
நாடியே யானென் றுரை
நம்பினை! பிழைத்தார்! இன்று
சாடினார் என்னில் என்னாம்?
சாய்க்கடைப் புழுக்கள் மண்ணில்
ஓடிடல் உயர்தல் உண்டோ?
உருகுதல் ஒழியும் நெஞ்சே!

மனம் அலை யாமல் நாளும்
மக்களை மனையை என்று
மனத்தராய் தனித்தமிழ்த்தாய்
மணம்பெறல் ஒன்றே மூச்சின்
நனவென மொழிந்து தோய்ந்த
நெஞ்சினாய்! திணையுங் கூட
கனவிலை! பனையாம்! உண்மை!
காலத்தின் கட்டா யம்மே!

பொன்னணி பொருளின் ஈட்டம்
புதுவள மனைகள் கூட்டம்
இன்னபல் ஏந்து வாய்ப்போ
டெழுங்காற்றில் தூற்றிக் கொள்ளல்
நண்ணுமோ தமிழை! இல்லை
நலஞ்சாலப் பண்ணு மாமோ?
என்னய்யா தெம்பல்? அந்த
இழிவுகள்... இழிவு கள்தாம்!

முழங்கினால் அரிமா! தாவல்
மேவினால் புலியின் பாய்ச்சல்!
வழங்கினாய் நாளும் நாளும்
வண்டமிழ் அமுதச் சோற்றை!
உழன்றனை என்றால் உள்ளம்
ஒப்புமோ? அடடா! என்ன
வழங்குவாய் என்றென் றேநும்
வாய்பார்த்து நிற்கின் றோம், யாம்!

புலங்கெட்ட தமிழ்க்கூட் டத்துள்
புகுந்துள தமிழ நெஞ்சே!
நலம்பெற வாழ்வென் றே,நீ
நினைந்திருந் திருப்பா யாகில்
துலங்கியே மிளிர்ந்தி ருப்பாய்!
தூய்தமிழ் அரிமா வே,நீ
கலந்ததோ தமிழி னூடே!
காலத்தும் நிலைப்பாய் நின்றே!

(16-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

கலை பண்பாட்டு ஒப்புநோக்கியல், வரலாறு, மொழியியல், வாழ்வியல் போன்ற பல்வேறு துறைகளில் நுண்ணறிவும் ஆர்வமும் உடையவர். உலகின் பல்வேறு நாடுகளுக்கும் நேரில் சென்று ஆங்காங்கு வாழும் மக்களைப் பற்றி நேரிடையாக நன்கறிந்தவர். ஆகவே, தமிழரின் பிறப்பிடம் பற்றி ஆராய்ச்சி நூல் எழுதத் தக்கார் இவரினும் சிறந்தார் இல்லையெனலாம்.

தமிழர்கள் தோன்றிய இடம் பற்றிப் பற்பலர் முன்பு தங்கள் மனம் போனவாக்கில் எழுதிவைத்துள்ளனர். திரவிடர் ஆசியக் கண்டத்தின் நடுப் பகுதியில் தோன்றிப் பின் இங்கு வந்தவர் என்றெழுதிவைத்தவர் சிலர். தமிழ்க்கூறுகள் உலகின் பல்வேறு பகுதிகளில் காணப்படுவது அவர்கள் ஆராய்ச்சியைக் குழப்பித் திணறச் செய்துள்ளது.

காலஞ்சென்ற தேவநேயப் பாவாணர் அவர்கள் தக்கக் கரணியங்காட்டித் தமிழர் தோன்றிய இடம் கடலில் மூழ்கிய குமரிக்கண்டமே என நிறுவியுள்ளார்கள். இந் நூலாசிரியரும், பற்பல விளக்கம், சான்று, எடுத்துக்காட்டுகளோடு அதே முடிவுக்கு வருகிறார். 'திரவிடர், ஆத்திரேலியர், ஆப்பிரிக்கர் என்ற மூன்று கருப்பு இனத்தாரும் ஒரு பொது மூதாதையரிலிருந்து பிறந்திருக்க வேண்டும். இப் பிரிவு பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே நிகழ்ந்துவிட்டது. இம் மூவரின் பொது முன்னோர், அழிந்த குமரிக்கண்டத்தில் இருந்தவர் ஆதல் வேண்டும். [பக்கம் 12]

நூல் முழுதும் நூலாசிரியரின் அளவிடற்கரிய தமிழ்ப்பற்றும், நுண்ணறிவும், தமிழர் தாழ்ந்து போயினரே என்ற ஏக்கமும் இழையோடக் காண்கிறோம்.

'தமிழர்தாம் சிறந்த பிறப்பினர் என்பதைவிடத் தம்மினும் வெள்ளையர், சீனர் ஆகியோர் சிறந்த பிறப்பினர் என்று நம்பினர்; நம்புகின்றனர்' தம்மொழியைக் காட்டிலும் ஆங்கிலம், பிரெஞ்சு, சீனம் ஆகியவை சிறந்தவை என்று நம்பினர்; நம்புகின்றனர் ......
[பக்கம் 3]

'அனைத்திற்கும் காரணம் தமிழரிடம் உள்ள தாழ்வு மனப்பான்மையே ஆகும்..... எனவேதான், தமிழர் வாழும் நாடுகளிலும் தமிழ், கல்வி மொழியாகவும் இல்லை; அரசியல் ஆட்சிமொழியாகவும் இல்லை; இறைமொழியாகவும் இல்லை, அறமன்ற முறை மொழியாகவும் இல்லை'. [பக். 3]

'தமிழர், கட்சி, சாதி, மதம் இவற்றால் பிளவுண்டு கிடக்கின்றனர். மொழிநலம், இனநலம் ஆகியவற்றைவிடத் தந்நலம் பெரிது எனக் கருதுகின்றனர். தமிழ்நலத்தைவிடத் தம் நலமே பெரிது எனப் போற்றுகின்றனர்.

தலை ஆடு போனால் எல்லா ஆடுகளும் பின் ஓடும் ஆட்டு இயல்பு தமிழர், வீட்டு இயல்பாகவும் நாட்டு இயல்பாகவும் ஆகிவிட்டது.
(பக். 3)

'இன்றுள்ள இந்திய மாநிலங்களுள் பெரிய மாநிலமாக விளங்கும் உத்திரப் பிரதேசத்தில் அரச இலச்சினை இரட்டை மீன்களும் வில்லும் உடையதாக இருப்பது கருதத்தக்கது, வில், தமிழ் மூவேந்தர்களுள் ஒருவராகிய சேரர் தம் குடி இலச்சினை! கொடி இலச்சினை! மீன், பாண்டிய மன்னர் தம் குடி இலச்சினை! கொடி இலச்சினை! இச்சான்றுகள் அற்றைத் தமிழ் மன்னர்தம் எச்சங் அல்லவா ?'
(பக். 88)

'..னி லையில் பல கணவாய்கள் உள்ளன. அவற்றுள் ஒரு கணவ..ன் பெயர் 'சோடா' என்று வழங்குகிறது. இது 'சோழா' என்பதின் திரிபு ஆகும்'.

நூலாசிரியரின் நுண்ணிய ஆராய்ச்சியின் வழித் திரவிடர்க்கும் ஆப்பிரிக்கருக்குமிடையே உள்ள பல்வேறு கலை, பண்பாட்டுக் கூறுகளில் உள்ள ஒற்றுமையைக் கண்டு வியந்து பாராட்டாமல் இருக்கவியலாது. 1. தாய்த் தெய்வ வழிபாடு 2. மருமக்கள் தாயம் 3. முருக வழிபாடு 4. நாக வழிபாடு 5. பல்லாங்குழி ஆட்டம் 6 7. கும்மி, கோலாட்டாம் 8. குடவோலை முறை 9. கண்ணன் கதை 10. மீன் சின்னம் எனப் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது !

மொகஞ்சதாரோ, அரப்பா பகுதிகளில் சீரோடு வாழ்ந்தோர் திரவிடர் தமிழரே எனின் அவர்கள் அங்கிருந்து பெயர்ந்து தென்புலம் வந்தனரா அல்லது தெற்கேயிருந்து வடபுலம் போயினரா என்றும் பர். அறவாணன் ஆய்ந்து, இலக்கியச் சான்று காட்டி, தெற்கே வாழ்ந்து, பின்னரே வடபுலம் போந்தனர் என்று நிறுவுகிறார்.

'தமிழ் மன்னன் [பாண்டியன்] தெற்கிலிருந்து வடக்காகத் தன் நாட்டை விரிவடையச் செய்தான் என்பதை இந்தப் பகுதி [கலித்தொகை 140] மிகத் தெளிவாகக் காட்டுகிறது. இதற்கு மேலாக இன்னொரு படி மேலே போய்த் தென்திசை இழப்பை ஈடு செய்ய வடதிசைக் கங்கையையும் இமயத்தையும் சேர்த்துக் கொண்டான் பாண்டியன் என்று சிலப்பதிகாரம் மொழிகிறது. [11: 20-21].
[பக். 126]

'தொடர்ந்து கடல் தரும் நில இழப்பையும் நீரிழப்பையும் தவிர்ப்பதற்காகவே திரவிடர் வடக்கு நோக்கி நகர்ந்தனர். பல காடுகளைக் கெடுத்து நாடாக்கினர். தமிழரசர்கள் காடு கெடுத்து நாடாக்கியதைத் தமிழர்கள் பெருமையாகப் பேசியதற்கு இதுவே காரணமாகும். கடம்பவனம் (மதுரை), தில்லைவனம் (சிதம்பரம்)

ஆர்க்காடு முதலான ஊர்ப்பெயர்கள் 'காடு' என்ற சொல்லைத் தாங்கியிருப்பதற்கும் இதுவே காரணம்...... தெற்கே நிகழ்ந்த குமரி ஆற்றலின் இழப்பு வடதிசைக் கங்கையைக் கொள்வதற்குக் காரணமாயிற்று. தெற்கே நிகழ்ந்த குமரி மலை இழப்பு வடக்கே இமயத்தைக் கொள்வதற்குக் காரணம் ஆயிற்று. (பக். 127)

'சிந்துவெளி நாகரிகம் திரவிடருடையது என்று முடிவு செய்யப்பெறின் கி.மு. 2500ரைச் சேர்ந்த அந் நாகரிகத்தைப் படைத்துவிட்டு, ஆரியர் தாக்குதலால் தென்புலம் போந்தனர் திரவிடத் தமிழர் என்பதைவிடத் தென்புலத்திலிருந்து ஏழு கிளையினர் வடக்கு நோக்கிச் சென்று சிந்துவெளி நாகரிகம் போன்றவற்றை அமைத்துக் கொண்டனர் என்பதே பொருந்துவது.

(பக். 126)

எல்லா ஆய்வு நூல்களிலும் காணப்படுதல் போலவே இந் நூலின் கண்ணும் சிற்சில முரண்பாடான, அல்லது அறிஞர்களால் ஏற்கத்தகாத முடிபுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன

1. நாகரால் பரவிய இயல்பே நாகரிகம் எனப்பட்டது: நாகர்கள், நகரங்களைச் சமைப்பதில் வல்லவர் என்பது பொதுவாக அறிஞர் பலரால் ஏற்கப்படுமொன்று. எனினும், நாகரிகம் என்பது நகர்களில் வாழும் அனைத்து மக்களாலும் பேணப்பெறும் பண்பாட்டு வழக்கங்கள் என்பதே பொருத்தமானது. காட்டாக, சிற்றூரில் (வேளாண்மை செய்யும்) ஒருவன் வேலையொழிந்த மாலை நேரத்திலும் அழுக்குத் துணியைக் கட்டிக்கொண்டிருந்தால் எவரும் சட்டை செய்வதில்லை. ஆனால் நகரிலோ நாகரிகம் தெரியாதவன் என இகழப்பெறுவான்.

மேலைநாட்டவரும் City dwelers-Civic-Civilization 'நாகரிகம்!

2. இளந் தேங்காயைக் குறிக்கும் 'இளநீர்' என்ற பெயர் நியூகினி என்ற பசிபிக் தீவின் பெயர்த் திரிபு என்பர். (நியூ = தென்னை, கினி = நிற்பது. நியுர்-நிய-நீர்) ஆக...... (பக். 81)

இளந் தேங்காய் நீர் மிகக்கொண்டது. ஆட்டிப் பார்க்க நீரின் வளம் தெரியும். இளமையான + நீர் மிக்கது = ஆகவே, இளநீர் எனக் காரணியப் பெயர் பெற்றது. தாளுண்ட நீரைத் தலையாலே தான் தருதலால் என்ற மூதுரைப் பாடலையும் ஒப்பு நோக்குக.

3. Sickle Cell anaemia...... ஆகிய நோய்கள் நீக்ரோய்த் ... இன மக்களுக்கு வருவதில்லை. அடிக்குறிப்பு 2 (பக் 73)

பிரித்தானிய நாட்டில் கிடைக்கும் மருத்துவக் குறிப்புகளின் படி, Sickle Cell anaemia ஆப்பிரிக்க-நீக்ரோய்த் இன மக்களிடமே மிகுதியாகக் காணப்படுகிறது.

4. தமிழர், மார்கழிப் பனி தவிர மலைக் குளிர் தாங்காதவர்... பெரும் பெரும் மலையில் ஏறிக் கடந்தமை பற்றிய குறிப்புகள் பழைய தமிழ் இலக்கியங்களில் காணவில்லை. எனவே, நடுநிலக் கடல் நாடுகள் ஆகிய குளிர் நாடுகளில் இருந்து பெயர்ந்து இடையிலுள்ள மலைகளையும் ஆறுகளையும் தாண்டி 6000 அயிரமாத்திரி (கிலோ மீட்டர்) நடந்து, தென்னிந்தியா வந்து சேர்ந்தனர் என்பதை ஏற்பதற்கில்லை.

இந்நாளைய (நடைப்பிணத்) தமிழரை மனத்திலிருத்தி அந்நாளைய தமிழரின் நிலையைக் கணித்தலாகாது. தவிர, மலைகளையும் நெடுந்தொலைவையும் கடந்து செல்ல வேண்டிய இன்றியமையாத தேவை ஏற்படுகையில், குளிருக்கும் தொலைவுக்கும் அஞ்சாது கடந்து முடிப்பர். இந்நாளிலும் சில வகைப் பறவைகளும், விலங்குகளும் முறையே தத்தம் பார்ப்பு, குட்டிகளோடு பருவ நிலைக்கேற்ப நெடுந்தொலைவு செல்வதை ஓர்க. அத்துடன் அன்றிருந்த தட்ப வெப்பம் இப்போதுள்ளதற்கு மாறுபட்டதாயிருந்திருக்கலாம். இலக்கியக் குறிப்புகள் இல்லாமை இத்தகு பெயர்ச்சி, இலக்கியம் எழுத்து வடிவில் எழாத இலக்கக் கணக்கான ஆண்டுகட்கு முன்னரே நிகழ்ந்திருக்கலாம். மாந்தர் தம் பெயர்ச்சி காலந்தோறும் தொடர்ந்து நடைபெற்று வருவதாகும் என்பது அறிஞர் கருத்து. (Migration is a Constand Process.

5. 'பலருடைய வியப்புக்குரிய இச் சாய்க்கடை அமைப்பு தமிழ்நாட்டில் எங்கும் இருந்ததாகத் தெரியவில்லை'. (பக் 84) எனக்கூறி, நூலாசிரியர் தம் கூற்றுக்கு உறுதுணையாக பட்டினப் பாலை பாடலில் 41-45 அடிகளைக் காட்டியுள்ளார். உயர்வு நவிற்சி என்பது ஒரு புறமிருக்க, 'சோறு வாக்கிய கொழுங்கஞ்சி' என்பதை சோறு நீரோடு சேர்ந்து பொங்குகையில் கீழே தெறித்து விழும் கஞ்சி எனப் பொருள் கொளின் (களிகள் களிகளோடு ...... முத்தொள்ளாயிரப் பாடல்), அக்கஞ்சி யாறு போலப் பரந்து ஒழுகி, தேர் ஓடத் துகள் செழுமி, நீறு ஆடியகளிறு போல, வேறுபட்ட வினை ஓவத்து வெண்கோயில் மாசூட்டுப்...... பாவலருடைய உள்ளக்கிடக்கை நன்கு வெளிப்படுத்தப்பட்டுவிட்டதெனலாம்.

கஞ்சி, சாய்க்கடையிலே ஊற்றப்படாததற்குக் காரணியம்: (மாடு, ஆடு போன்ற விலங்கினங்களுக்கு) உணவாகத் தக்கது சாய்க்கடையிலே விழக்கூடாது என்று எண்ணியதாயிருக்கலாம். இப்போதும் தமிழர் பலர், பால் கெட்டுப் (முறிந்து) போயினும் அதனைச் சாய்க்கடையிலே ஊற்றுவது தீச்செயலாகக் கருதுபவர்.

தமிழகத்தின் பல பகுதிகளிலும் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும், இப்போதும் மேற்கொள்ளப்பட்டுவரினும், மேலை நாடுகளோடும், சப்பான் போன்ற முன்னேறிய நாடுகளோடும் ஒப்பிடும் அளவுக்கு மேற்கொள்ளப்படவில்லை எனத் துணிந்து

கூறலாம். ஆகவே, அத்தகு அளவில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்படும்போது தமிழரின் பழங்கட்டடக் கலை போன்ற மாண்பு நன்கு தெரியவரும்.

விடுபட்டுப் போனவை :

நூலாசிரியர் தம் முன்னுரையில், (பக். 1) "பழம் பெருமை பெற்றிருந்த உயர் இனங்கள்" என்று உரோமர், எகிப்தியர், சீனர், யூதரைப்பற்றி மட்டுமே குறிப்பிடுகிறார். உரோமர்களுக்கும் முன்னவர்களான - கலை, பண்பாடு, வாழ்வியல் நெறிமுறை போன்றவற்றில் ஆகிய - ஐரோப்பியருக்கு வழிகாட்டிகள் எனக் கூறப்பெறும் கிரேக்கரைப் பற்றிக் குறிப்பிடவில்லை.

பக்கம் 14-இல் பல்வகை மாந்த இனத்தோரின் உதடுகள் நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளன. ஆனால்; அவற்றுக்குக் கீழ 1. மெல்லிய உதடுகள், 2. தடித்தர உதடுகள், 3. பருத்த உதடுகள், 4. உப்பிய உதடுகள் எனக் காணப்பெறும் விளக்கம் பட அமைப்புக்கு நேர் எதிர்மாறாக உள்ளது.

பக்கம் 19-இல் மக்கள் தாயமுறையும் மருமக்கள் தாயமுறையும் வரிவடிவ (பட) உருவில் விளக்கப்பட்டுள்ள முறை பாராட்டுதற்குரியது.

இந்நூலின் பொருளடக்கம் எளிதில் புரியும் வண்ண விளக்கமாகவும் உள்ளது. சிறப்புப் பெயர் அகராதியும் பய தற்குரிய வகையில் தரப்பட்டுள்ளது.

சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம் அறக்கட்டளைச் சொற்பொழிவு வரிசையில் முதலாவதாக வெளிவந்துள்ள இந்நூலுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நெறியாளர் முனைவர் ச. வே. சுப்பிரமணியம் அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார்.

நூலின் முகப்பில் பொருத்தமான-தற்கால மாந்தரின் ஓவியம் அணி செய்து, இஃது என்ன வகை நூலென்பதைக் கட்டியங் கூறுவதாகவுள்ளது.

மொத்தத்தில், தமிழரின் தாயகம் என்ற இந்த ஆய்வு நூல், பேரா. க. ப. அறவாணன் அவர்களின் ஏனைய நூல்கள் போலவே, நல்ல எளிய நடையில் சிறப்பாக அமைந்துள்ளது.

தமிழரின் வரலாறு இன்னமுஞ் செப்பமுற எழுதப்படாதிருக்கும் இவ்வேளையில் இந்நூல் காரிருளை அகற்ற முனைந்து துதித்த விடிவெள்ளி என எண்ணி மகிழலாம். நூலாசிரியர் முனைவர் க. ப. அறவாணன் அவர்களை, நல்ல பயன் விளைவிக்கத் தக்க நூலொன்றை எழுதித் தமிழருலகத்துக்கு அளித்தமைக்காகப் பாராட்டுகிறோம்.

தமிழர், தம் உண்மைத் தாயகம் பற்றி அறிந்து இன்புற இந்நூலைப் படித்துப் பயன்பெற வேண்டுமென்பதே நம் அவா; வேண்டுகோளுங்கூட. —தமிழ்மணி. அரங்க முருகையன்.

இன்றும் என்றும் விடுதலைபெற முடியாத இழி நிலைகளைத் தோற்று வித்த மூடக்கொள்கைகளில் மூடமாகக்கிடந்து பெரும் பொருளைச் செலவு செய்து வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். மற்றும் பலர், சில தலைவர்கள் தங்கள் வாழ்வில் எழுத்து, சொல் செயல் மூன்றி லும் ஒருமை இன்றிக் கொள்கைகளில் நாளொரு மேனியும் பொழுது ஒரு வண்ணமுமாக (பச்சோந்தியாக) உறுதியும், நேர்மை யும் பண்பும் இன்றிப் பேசியும் எழுதியும் வாழ்ந்து வருகின்றனர்.

இங்ஙனம் இன்றைய தமிழர்களைப் பல அவலநிலைகளில் வாழ்ந் திடும் வகையினை எழுதி மாளாது. ஏடுகள் அடங்கா.

'செந்தமிழை, செந்தமிழ் நாட்டைச் சிறை மீட்க' நந்தமிழர் களில் சீரிய, விழுமிய, பண்புகள், கொள்கைகள் கொண்ட 'இயக்கம்' ஒன்று தமிழகத்தின் கீழ் திக்கில் 'எழுஞாயிறு' என என்று தோன்றுமோ? அந்நாள்தான் தமிழகத்தின் விடுதலைக்கு ஒப்பற்ற நன்னாள்; பொன்னாள்.

அன்றுதான் 'சாதி, சமயம் கடவுள்' அற்ற ஓர் உண்மைத் தமிழகம் உருவாகிடும், அன்றுதான் நாம் அனைவரும் தமிழர், தமிழ்நாடு தமிழ்நாடு தன்னிறைவு பெற்ற திருத்தமிழ்நாடாக விளங்கிடும்.

இப் பெரும் கனவிற்குத் தாங்கள் எடுத்துக்கொண்ட தூய பணிகளில் கூட இன்னும் முயற்சிகள் தேவை எனப் பணிவுடன் கூறிடவிழைகிறேன். உலகத்தமிழ்க்கழகம், உலகத் தமிழின முன்னேற்றக்கழகம் என இருபிரிவில் செயல் படுவதை விடுத்து. ஒருங்கிணைந்து, ஒருமைப்பாடுகொண்டு செயல்பட வேண்டுகி றேன். இதில் நீ, நான், என்ற இழிநிலை கூடாது. சீரிய பண்புகளைப் பெற்றுப் பாடாற்றவேண்டும். அன்று முதல் இன்று வரை தமிழர்கள் வீழ்ச்சிக்குக் கரணியம், பொறாமை, போட்டி மனப்பான்மை, விட்டுக்கொடுக்கும் பண்பு இன்மை, காட்டிக் கொடுக்கும் கயமைகள், காம உணர்வுகள் இவை போன்று ஏராளம் கூறலாம். தங்கள் பணிகள் சிறந்திடுக.

வணக்கம். நன்றி, இன்னணம் தங்கள் அன்புள்ள,

— தமிழ்ச்செல்வி, அம்மணிமங்கலம்.

0 : 1121: மதிப்புமிகு ஐயா அவர்களுக்கு வணக்கத்துடன் எழுதிக் கொள்கின்ற மடங்கல். நான் கடந்துபோன காலங்களில் இருந்து, தங்களது தனித்தமிழ்ச் சுவடியான 'தென்மொழி'யினைக் காணுதவரையில் கல்வி கற்றதாகவும், ஒரு தமிழனாகவும், கருதிக் கொண்டிருந்தேன். ஆனால், உண்மையில் இருளில் இருந்து கொண்டுதான் இருந்துள்ளேன். நான் எப்போதும் முற்போக்கையே விரும்பவும், விரும்பியதை நடைமுறைப் படுத்தவும் என்னையே இக் குமுகாயத்திற்கு ஒப்புவித்துள்ளேன். இருளில் கிடந்த நான் பல இலக்கிய இலக்கணங்களைத் "தேடி" நாடி ஓடித் தேர்ந்தெடுக்க வேண்டிய இக்கால கட்டத்தில், எனக்குத் தங்களது 'தென்மொழி' வழிகாட்டி, ஒளி காட்டியதுதான் நான் விழிப்புற்ற ஒரு நன்னா ளாகும். குப்பைகள் நிறைந்த இக் குமுகாயத்தில் குண்டுமணி யினைக் கிளர்ந்துதான் எடுக்கவேண்டியுள்ளது மேலும், நான் தங்களிடமிருந்து தங்கள் இதழ்களான 'தென்மொழி', 'தமிழ்ச் சிட்டு', 'தமிழ்நிலம்' இவற்றை எனது நகரில் விற்பனை செய்ய விரும்புகின்றேன். ஆதலின், தங்கள் இதழ்களை அனுப்பினால் நான் பல வழிகளிலும், பண்பாட்டுச் செயல் செய்வதற்கு ஏதுவாக இருக்கும். இவண், —மா. நாகராசன், தாராபுரம், (தாலுகா)

0 : 1122: பேரன்பும், பெருமதிப்பும் உடைய பாவலரேறு பெருஞ்சித்திரனார், ஐயா அவர்களுக்கு, எனது வணக்கங்கள்.

(தொடர்ச்சி அட்டை 4-ஆம் பக்கம்)

சுவடி-21, ஓலை-11-இல் 'சிறப்பு மடல்' என்ற தலைப்பில் சி. தமிழரசன் எழுதி இருந்த கட்டுரையைப் படித்தேன். தங்களைப் புரிந்து கொள்ளவில்லை என்றும், கலைஞரை விட இராமச்சந்திரன் ஆட்சி தமிழுக்கு நன்மை செய்து வருவதாகவும், கலைஞர் அவர்கள் ஈழத் தமிழர்க்காக முதலைக் கண்ணீர் வடிப்பதாகவும், இன்னும் பல மேற்கோள்களைக் காட்டி இருந்தார். இவர் ஒரு மாற்றாரின் கைக் கூலி, அல்லது ஆரியர்களின் எடுபிடி என்றும், தமிழாழம் தெரியாதவர் என்றுமே நான் கருதுகிறேன்! இப்படிப் பட்டவர்களின் கட்டுரைகளை வெளியிடுவதால், 'தென்மொழி'யின் தரம் கெடும்; வளர்ச்சி குன்றுமோ என அஞ்சுகிறேன். இத்தகையவர்களின் மடல்களைத் 'தெனமொழி'யில் வெளியிடாமல் இருக்க தங்களைத் தலை தாழ்த்தி வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன். தங்களைப் புரிந்துகொள்ள வில்லை எனவும் பொது மக்களை விடத் தங்களைத தாழ்த்துகிறார். சாக்ரடீசுக்கு நஞ்சு கொடுக்க இசைவளித்தவர்கள், சாகரடீசை அறிந்தவர்களா? புரிந்தவர்களா? இவண்,

—கோ. வி. இளஞ்சேரன், இரும்புலியூர்.

0: 1123 : அன்புடையீர், கணியன் வரைவது. நலமும் வளமும் சூழட்டும். வணக்கம். நலம் திரு அருளி அவர்கள் தமிழ், சமற்கிருதம் மற்றும் பிற ஆந்தியமொழிகளின் ஆராய்ச்சி நிறுவனத்தில் ஆற்றிய மொழியியல் உரைகள்' எனும் நூலின் ஐந்து மடலங்களின் வெளியீட்டு விழாவன்று புதுவை, கம்பன் கலை அரங்கில் தங்களைக் கண்டு பெருமகிழ்வடைந்தேன்.

தங்கள் உடலிலும் சோர்வு கண்டேன். அதே சோர்வு அன்று தாங்கள் ஆற்றிய உரையிலும் கண்டேன். ஏன்? 'ஒற்றைத் தமிழ்மகன் உள்ளவரை உள்ளத்தே அற்றைத் தமிழ்த்தாய் ஆட்சி புரியும்வரை' எனும் தங்கள் வரலாற்றுப் பாடலுக்கேற்ப, சோர்வு என்ற பேச்சுக்கே இடம் வேண்டா. இவ் வையத்தில் 'தமிழ் வெற்றி பெறப்போவது உண்மையிலும் உண்மையாகையால் சோர்வடையவேண்டா!

தமிழுக்கு விளம்பரம் தேவையா? இங்ஙனமே தங்கட்கும் விளம்பரம் தேவையன்று. தமிழோடு தமிழாகத் தாங்கள் வாழ்கின்றீர்கள். 'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை, எனும் பாவேந்தரின் மொழி உண்மையாதலால் தனிப்பட்ட பெருமை, புகழ் வேண்டா! 'தென்மொழி' தமிழின் தனிப்பெரும் ஆற்றலைத் துறைதோறும் புறப்படுத்தட்டும் நமக்கு அடுத்துத் தமிழாட்சியே மலரும் என்பது உண்மை! தந்நலமற்ற தங்கள் உழைப்பும் பாவாணர் உழைப்பும் வீண்போகவில்லை என மகிழ்கின்றோம்.

சுவடி 21-ஓலை 10-இல்; 'தூய தமிழ் அகரமுதலிப் பதிப்பாசிரியராக அருளி அமர்த்தம்' பற்றி ஆசிரியவுரை வரைந்துள்ளீர்கள். மகிழ்ச்சி நன்றி. தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகத் துணை வேந்தர் அவர்களை எத்துணை வேண்டுமானாலும் பாராட்டுங்கள். அவரின் 'வினையால் வேருகும் மாந்தர்களை'த் 'தெரிந்து தெளிதல்' மிக மிகப் பாராட்டிற்குரியது. திரு அருளியார் அவர்களைக் குறித்து, பிறர் அவரின் (திரு அருளியார் அவர்களின்) ஆய்வு மதிப்பீட்டில் நிறைவு பெறுது நிற்பது அவரின் இளமைப் பருவமே- என்று வரைவது எம்போன்றோர்க்குப் பெரும் வியப்பாகவிருக்கிறது.

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)